இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

3/-

மாதமிரு இதழ் — 460 ● 1995 மே 5 வெள்ளிக்கிழமை

உள்ளே:

★ சோவியத் யூனியனில் ஸ்டாலினிசத்துக்கு மாற்றீடு இருந்ததா?
பேராசிரியர் வடிம றொகோவின் விரிவுரைத் தொடர்ச்சி
பக்கம் 7 – 8

★ தொழிலாளர் – ஒடுக்கப்படும் மக்களுக்கு புதிய முன்னோக்கும் தலைமையும் அவசியம்
பு.க.க. செயலாளர் விஜே டயசின் உரை
பக்கம் 4 – 5 – 9

# பொதுஜன முன்னணி - விடுதலைப் புலிகள் சமரசம் சிதறியதன் பின்னணி

LIBRARY UNIVERSITY OF JAFFNA 10-10-1995

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் நெருக்கடியை மேலும் பன்மடங்கு உக்கிரமாக்கும் விதத்தில் விடுதலைப் புலிகளுக்கும் — அரசாங்கத்துக்கும் இடையேயான 'மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம்' ஏப்ரல் 19ல் சிதறுண்டு போயிற்று. இது கடந்த சில மாதங்களாக சந்திரிகா பண்டாரநாயக்க அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நான்கு சுற்றுக்களாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வந்த அரசியல் பேரம் பேசல்களின் பிற்போக்கினையும் மோசடியையும் சந்திக்குக் கொணர்ந்துள்ளது.

தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்து, இனவாத யுத்தத்துக்கு முடிவு கட்டி, நிஜ சமாதானத்தினை உத்தரவாதம் செய்வதானது தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீன வேலைத்திட்டத்தின் அடிப்படையில் முதலாளித்துவ அமைப்பை தூக்கி வீசப் போராடுவதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும். இந்த வரலாற்று உண்மை தொழிலாளர் – ஒடுக்கப்படும் மக்களின் எதிரில மீண்டும் ஒரு தடவை சக்திவாய்ந்த முறையில் எழுந்து நிற்கின்றது.

தமது கோரிக்கைகள் வழங்கப்படாது போகின் சமாதானப் பேச்சுவார்த்தையில் இருந்தும், மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்தும் விலகிக் கொள்ளப் போவதாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே பிரபாகரன் அறிவித்து இருந்தார். முதலில் மார்ச் 28ம் திகதியையும் பின்னர் ஏப்ரல் 19ம் திகதியையும் அவர் காலக்கெடுவாக சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கு அறிவித்திருந்தார். இதைத் தொடர்ந்து திருகோணமலை துறைமுகப் பிராந்தியத்தில் நின்றிருந்த கடற்படையின் இரண்டு பீரங்கிப் படகுகள் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினரால் ஏப்ரல் 18ல் நிர்மூலமாக்கப்பட்டது.

உடன்படிக்கை தகர்ந்து போனாலும் 'சமாதான நடவடிக்கைகளை தொடர்ந்து கடைப்பிடிப்போம்' எனக் கதையளக்கும் அறிக்கையை ஜனாதிபதி செயலகம் ஏப்ரல் 19ல வெளியிட்டது. அந்த அறிக்கையின் இறுதியில் வடக்குக்கு மீண்டும பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் எனவும் தளர்த்தப்பட்ட மீன்பிடி தடைகள் முழு அளவில் அமுலுக்கு வரும் எனவும் குறிப்பிடப்பட்டது.

அத்தோடு கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் 70 'புலி சந்தேக நபர்கள்' கைது செய்யப்பட்டதாயும் புலிகளைப் பிடிக்கும் இந்த பொலிஸ் வேட்டை தொடரும் எனவும் கொழும்பு பிரதி பொலிஸ் மா அதிபர் அறிவித்தார்.

## 'சமாதான' முயற்சியின் நிஜ கோலம்

இவை யூ.என்.பி அரசாங்க காலத்தில் தொடக்கி வைக்கப்பட்ட இனவாத யுத்தத்தின் நடவடிக்கைகள் சமாதானத்தை நாடி நின்ற தமிழ் பொது மக்களின் அவலங்களைப் போக்கி நிவாரணம் வழங்கும் பொருட்டு பொதுஜன முன்னணி அரசாங்கம் பாவனைப் பொருட்கள் மீதான தடைகளை அகற்றியது என்ற கீழ்த்தரமான பொய் இதன் மூலம் அம்பலமாகியுள்ளது.

(3ம் பக்கம் பார்க்க)

# தோட்ட தொழிலாளர் இளைஞரை காப்போம்!

"தோட்டத் தொழிலாளர் ஒடுக்குமுறையை நிறுத்து!" "கைது செய்யப்பட்ட தோட்ட இளைஞர்களை விடுதலை செய்!" என்ற சுலோகங்களின் கீழ் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் பெருந்தோட்ட கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் நடாத்திவரும் பிரச்சாரத்தின் முன்னோடி நடவடிக்கையாக தோட்டத் தொழிலாளர் நடவடிக்கை குழுவை நிர்மாணித்துள்ளன. ஏப்ரல் 26ம் திகதி அட்டனில் நடைபெற்ற இக்குழுவின் ஸ்தாபக கூட்டத்தில் பெண் தொழிலாளர்கள் உட்பட 18 தோட்டத் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் இந்த நடவடிக்கை குழுவில் சேர்ந்து கைதுசெய்யப்பட்ட தோட்டத் தொழிலாளர் இளைஞர்களை விடுதலை செய்யப் போராட இணங்கியுள்ளனர்.

ஏனைய சகல அமைப்புக்களும் தோட்டத் தொழிலாளர்களை கைசழுவி விட்டுள்ளதாகவும் தொழிலாளர்கள் சார்பில் நிற்றுவரும் ஒரே இயக்கம் பு.க.க. மட்டுமே எனவும் பெண் தொழிலாளி ஒருவர் குறிப்பிட்டார். பொதுஜன முன்னணி அரசாங்கத்தின பிரதி அமைச்சரான மலையக மக்கள் முன்னணி தலைவர் பீ. சந்திரசேகரன் தோட்டத் தொழிலாளர் இளைஞர்களின் கைதுக்கு ஆதரவு வழங்கும் முறையை அவர்களின் பேச்சுக்கள் எடுத்துக்காட்டின. கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் தொடர்பாக தலையிடுமாறு கேட்கத் தாம் ஏழு தடவைகள் சந்திரசேகரனை சந்திக்கச் சென்றதாகவும் அதனால் எந்தவிதமான பலனும் கிட்டவில்லை எனவும் மற்றொரு பெண் தொழிலாளி குறிப்பிட்டார்.

தோட்டத் தொழிலாளர் இளைஞர்களை உடனடியாக விடுதலை செய்யும்படி நடாத்தும் போராட்டத்தில் இணையும்படி இலங்கையிலும் அனைத்துலகிலும் தொழிலாளர் வர்க்க இயக்கத்தினுள் கையெழுத்து இயக்கத்தை நடாத்துவதெனவும், இவர்களை உடன் விடுதலை செய்யும்படி பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும் பெட்டிசத்தில் கையெழுத்து திரட்டுவதெனவும் நடவடிக்கை குழுவில் சேர்ந்த தொழிலாளர்கள் தீர்மானம் செய்தனர். அவ்வாறே இந்த பிரச்சாரத்திற்கு அவசியமான செலவினங்களுக்கான ரூபா 25000/- உதவி நிதியின் பேரில் இப் பிராந்தியத்தில் ரூபா 10,000/ திரட்டுவதெனவும் தீர்மானித்தனர்.

ஏனைய கட்சிகளும் தொழிற் சங்கங்களும் தம்மைக் காட்டிக் கொடுத்துள்ள நிலைமையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை தொழிலாளர் வர்க்கத்தின் கட்சியாக கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தினை அங்கு திரண்ட அனைவரும் வலியுறுத்தினர். வடக்கு — கிழக்கு யுத்தம் மீள ஆரம்பித்துள்ளதால் கைது செய்யப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்ய முடியாது என பொலிசார் தமக்கு அறிவித்துள்ளதாக கைதான இளைஞர்களின் பெற்றோர் அங்கு தெரிவித்தனர். இனவாத யுத்தம் மீண்டும் ஆரம்பித்ததோடு தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான இனவாதத்தினை உக்கிரமாக்கி அவர்களுக்கு எதிரான ஒடுக்குமுறையை மேலும் மேலும் உக்கிரமாக்க அரசு முடிவு செய்துள்ளதை பொலிசாரின் இக்கூற்று எடுத்துக் காட்டுகிறது.

தோட்டத் தொழிலாளர்களை பொதுஜன முன்னணி அரசாங்கம் கைதுசெய்தமை அதன் படுமோசமான ஒடுக்குமுறை திட்டத்தின் ஒரு பாகமாகும். இலாபத்தில் இயங்கும் தோட்டங்களை

(2ம் பக்கம் பார்க்க)

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மே தினம்



பொதுஜன முன்னணி அரசாங்கம் மேதின ஊர்வலத்திற்கு தடை விதித்திருந்தும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத பதாகையின் கீழ் மேதின ஊர்வலத்தை கொழும்பு நகரத்தில் நடாத்தியது. — இது அந்த ஊர்வலத்தின் ஒரு பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

அட்டன் நகரசபை மண்டபம்

# கைது செய்த தோட்ட இளைஞர்களை விடுதலை செய்!

## - பு.க.க. கூட்டம்

தோட்ட இளைஞர்களை கைது செய்வதை நிறுத்து! அரசியல் கைதிகளை விடுதலை செய்! தோட்டத் தொழிலாளர்களைக் காப்பாற்று! என்ற மூன்று முக்கிய சுலோகத்தின் அடிப்படையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் ஏப்ரல் 8ம் திகதி அட்டன் நகர மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டத்தினை நடாத்தின. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மத்திய குழு உறுப்பினர் எம். அரவிந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அரசியல் கைதியான ஜெயபிரகாஷின் தந்தையான குடாஓயா தோட்டத்தைச் சேர்ந்த நல்லமுத்து உரை நிகழ்த்தியமை ஒரு சிறப்பு அம்சமாக விளங்கியது.

பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள தோட்ட இளைஞர்களின் பெற்றோர்கள், கொட்டகலை எத்தன்சைட், பென்மூர் தோட்ட தொழிலாளர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

தோழர் அரவிந்தன் கூட்டத்தினை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் பொலிஸ் நிலையங்களில் விசாரணை இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களை விடுதலை செய்ய எந்த ஒரு அரசியல் கட்சியோ தொழிற் சங்கமோ அல்லது சமூக சேவை நிறுவனங்களோ முன்வரவில்லை எனக் குறிப்பிட்டார் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே இவர்களை விடுதலை செய்யும் பிரச்சாரத்தை நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து வைத்துள்ளதாகக் குறிப்பிட்டதோடு அதற்கான செயற்பாட்டுக்கென தொழிலாளர் பாதுகாப்பு கமிட்டியை அமைத்துக் கொண்டுள்ளதாயும் சொன்னார்.

கைது செய்யப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கும் இளைஞர்களுக்கும் சட்டரீதியாக உதவி வழங்கவும் தொழிலாளர் பாதுகாப்பு கமிட்டி தீர்மானித்துள்ளதென அரவிந்தன் கூட்டத்தில் குறிப்பிட்டதோடு இதன் முதற்கட்டமாக ஆறுமுகம் முத்துவிநாயகர், நல்லமுத்து ஜெயபிரகாஷ் ஆகியோரின் சார்பில் மனித உரிமைகள் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கத் தலைவரும் பு.க.க. மத்திய குழு உறுப்பினருமான ரீ. என். நிஹிஷான் பேசுகையில இக்கூட்டம எண்ணிக்கையில் சிறிதானாலும் இப்பகுதியில் நடைபெறும ஒரு முக்கியமான கூட்டம் எனக் குறிப்பிட்டார். தோட்டத் தொழிலாளர்களின் 'மாபெரும்' தொழிற் சங்கங்கள் எனத் தம்பட்டம் அடித்துக்கொள்ளும் சங்கங்கள் இந்த தோட்ட இளைஞர்களை விடுதலை செய்வது தொடர்பாக முழு மௌனம் சாதிப்பதாக அவர் சுட்டிககாட்டினார்.

பு, க. க. தேர்தல் விஞ்ஞாபன வாசகங்களை கூட்டத்தினருக்கு நினைவுபடுத்திய நிஹிஷான் இந்த பொதுஜன முன்னணி அரசாங்கம் யூ.என்.பி. ஆட்சியாளர்கள் விட்டுச் சென்ற இடத்தில் இருந்து தொழிற்பட்டு வருவதாயும் அதில் இருந்து வேறுபட்ட வேலைத்திட்டம் இன்றைய ஆட்சியாளர்களுக்கு கிடையாது என்றார். கடந்த யூ. என் பி. ஆட்சிக் காலத்தில் இ.தொ.கா. தலைவர்கள் தோட்டங்களில் பயங்கரவாதிகள் உள்ளனர் என்ற பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டதோடு நூற்றுக்கணக்கான இளைஞர்களை சிறைகளுக்குள் தள்ளியதன் மூலம பெருந் தோட்டத் துறையில் ஒரு பதட்ட நிலையை உண்டு பண்ணினர் எனக் கூறினார்,

கடந்த யூ.என்.பி. காலத்தில் கூட்டுப்படைத் தலைமை அலுவலக குண்டு வெடிப்பு சம்பந்தமாக சிறைப்பிடிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட மலையக மக்கள் முன்னணி தலைவரும் பிரதி அமைச்சருமான பி. சந்திரசேகரன் இந்த வேட்டையுடன் கைகோர்த்துக் கொண்டுள்ளதாக நிஹிஷான் குற்றம் சாட்டினார். பிள்ளைகளை விடுதலை செய்ய உதவும்படி அவரைக் கோரிய பெற்றோரிடம் அவர் 'விடுதலைப் புலிகளுடன் இவர்கள் தொடர்பு கொண்டுள்ளதால் என்னால் எதுவும் செய்ய முடியாது'' எனக் கூறி மறுத்து விட்டார். மாறாக இவர் ''தோட்டத் தொழிலாளர்கள் ஒரு தனிப்பட்ட தேசிய இனம். சிங்கள தொழிலாளருடன் இவர்களுக்கு எதுவித தொடர்பும் கிடையாது'' என்ற பிற்போக்கு பிரச்சாரத்தினை முடுக்கி விட்டுள்ளார் என்றார்.

சிறப்புரையின் முடிவில் சுயவிருப்பின் பேரில் கூட்டத்தில் பேச முனவந்த கைது செய்யப்பட்டுள்ள ஜயப்பிரகாசின் தந்தையான நல்லமுத்து பின்வருமாறு குறிப்பிட்டார்: ''1966ல் நான் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவனாக இருந்தேன். கட்சியை கட்டியெழுப்ப நாம் இராப்பகலாக உழைத்தோம். ஆனால் 3 ஆண்டுகள் செல்வதற்குள் கட்சி சந்தர்ப்பவாத ரீதியில் இரண்டாக பிளவு பட்டது. இ.தொ.கா. வும ஏனைய அமைப்புகளும் எம்மைப் புறக்கணித்தன. இப்போது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மீள பிறந்துள்ளது. இந்நிலைமையை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஆய்வுக்குள்ளாக்கியுள்ளது.'' என்றார்.

இத் தொழிலாளி குறிப்பிட்டவற்றுள் சில குழப்பங்கள் இருப்பதாகக் குறிப்பிட்ட தோழர் ரீ. என். நிஹிஷான் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் என்பது கம்யூனிஸ்ட் கட்சியை மீள பிறக்கவைப்பதாகும் எனக் கூறுவது தவறாகும் என்றார். பு.க.க. ஸ்டாலினிசத்துக்கு எதிராகப் போராடிய ட்ரொட்ஸ்கிச நான்காம் அகிலத்தின் இலங்கை கிளை எனவும் அது ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சியை முழுமனே எதிர்த்து நின்றதோடு புரட்சிகர உலகக் கட்சியின் பகுதியாகும் எனவும் சுட்டிக் காட்டினார்.

### கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்களும் தொழிலாளர்களும்

(1) ஆறுமுகம் முத்துவிநாயகர் (28)
— கிறிஸ்லர் பாம் தோட்டம், கொட்டகல

(2) நல்லமுத்து ஜயபிரகாஷ் (24)
— குடாஓயா தோட்டம், அட்டன்

(3) தேவபதி சவரிமுத்து (44)
— சலங்கண்டி தோட்டம், டிக்கோயா

(4) தேவசகாயன் பிரான்சிஸ் — ,,

(5) சாமிமுத்து பெனடிக் (20) — ,,

(6) சிவனடியார் (65) — ,,

(7) அருணாசலம் — சன்லிஸ் டிவிசன்,
சலங்கண்டி தோட்டம், டிக்கோயா

(8) ஆறுமுகம் காளிமுத்து (25)
— சித்ராவத்த டிவிசன், ஸ்ரத்டன் தோட்டம், அட்டன்

(9) பிச்சமுத்து சந்திரன் (20) — ,,

(10) சுப்பு உதயகுமார் (25) — ,,

(11) வீரையா சண்முகநாதன் (25) — ,,

(12) வரதையன் கமலநாதன்

(13) அழகப்பன் சாந்தகுமார் — செயலாளர்,
புதிய ஜனநாயக முன்னணி

கைது செய்யப்பட்டுள்ள தொழிலாளர்கள், இளைஞர்கள் பற்றிய தகவல்களை அம்பலப்படுத்த பொதுஜன முன்னணி அரசாங்க அதிகாரிகளும் பொலிசாரும் மறுத்துள்ள நிலைமையில் இவர்களை விடுதலை செய்யும் போராட்டத்தின் ஒரு பாகமாக கைது செய்யப்பட்டுள்ளவர்கள் பற்றிய தகவல்களை அம்பலப் படுத்த வேண்டும். ஆதலால் தாங்கள் அறிந்த விபரங்களை கீழ்க்காணும் எமது முகவரிக்கு அனுப்புமாறு தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த வாசகர்களை வேண்டுகின்றோம்.

முகவரி: புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்,
இல. 90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு - 10

## ஆட்கொணர்வு மனு தாக்கல்

தோட்டத் தொழிலாளர் இளைஞர்களை விடுதலை செய்யும் அரசியல் பிரச்சார இயக்கத்தினை முன்நின்று நடாத்தும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதிலும் ஈடுபட்டுள்ளது. இதன் ஆரம்ப நடவடிக்கையாக கொட்டகலை கிறிஸ்லர் பாம் தோட்டத்தைச் சேர்ந்த ஆறுமுகம் முத்துவிநாயகர், அட்டன் குடாஓயா தோட்டத்தைச் சேர்ந்த நல்லமுத்து ஜயபிரகாஷ் என்ற தோட்ட இளைஞர்கள் சார்பில் ஆட்கொணர்வு மனுக்களை தாக்கல் செய்ய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கிடையே இரண்டு மாதங்களுக்கு மேலாக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள புதிய ஜனநாயக முன்னணி எனப்படுவதன் செயலாளரான டாக்டர் அழகப்பன் சாந்தகுமாரின் சார்பில் ஆட்கொணர்வு மனு மார்ச் 30ம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாயும் அது மே 11ம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் அம்முன்னணியின் தலைவரான இளஞ்செழியன் தொழிலாளர் பாதையிடம் தெரிவித்தார். தடுப்புக் காவலில் இரண்டு மாதங்களைக் கழித்து விட்ட தமது செயலாளர் சம்பந்தமாக எதுவும் செய்யாது காலங்கழித்த — ஆட்கொணர்வுமனு உட்பட— இளஞ்செழியன் இன்று கதிகலங்கி ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்வதில் குதித்தது ஏன்? சாந்தகுமார் உட்பட ஏனைய சகல தோட்டத் தொழிலாளர் இளைஞர்களையும் விடுதலை செய்யும் போராட்டத்தினை பு.க.க. ஆரம்பித்ததே, இளஞ்செழியனின் கூற்றின்படி இந்த ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்திருப்பவர் செங்கொடிச் சங்கச் செயலாளர் ஸ்டாலினிச ஓ. ஏ. இராமையாவாகும், இவர் கொட்டகலை கிறிஸ்லர் பாம் தோட்ட தொழிலாளி ஆறுமுகம் முத்துவிநாயகரின் மனைவி தமது கணவனை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கும்படி கோரியபோது அதை நிராகரித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் பிரச்சார இயக்கம் தோட்டத் தொழிலாளர் மத்தியில் பு. க. க. வின் அரசியல் செல்வாக்கை அதிகரிக்கச் செய்யும் என் பதையிட்டு இளஞ்செழியனும் புதிய ஜனநாயக முன்னணியின் தலைவர்களும் மற்றும் துரோகிகளும் கலக்கம் அடைந்துள்ளதே இந்த அவஸ்தைக்கு காரணம்.

## தோட்ட தொழிலாளர் இளைஞர்களை பாதுகாப்போம்!

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உள்நாட்டு வெளிநாட்டு முதலாளித்துவ கம்பனிகளுக்கு கையளிக்கவும் நஷ்டத்தில் இயங்கும் தோட்டங்களை இழுத்து மூடவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இது லட்சோபலட்சம் தொழிலாளர்களை தோட்டங்களில் இருந்து வெளியேற்றுவதாயும் எஞ்சியுள்ளோரை கொடிய சேவைநிலைமைகளின் கீழ் சுரண்டுவதாயும் இருக்கும்.

தோட்டத் தனியார்மயத்துக்கு முழு ஆதரவு வழங்கும் இ.தொ.கா.வும், மலையக மக்கள் முன்னணியும் அரசாங்கத்தின் ஒடுக்கு முறைக்கு நேரடி ஆதரவு வழங்குவதும் ஏனைய தலைவர்கள் முழு மௌனம் சாதிப்பதும் [illegible]. ஆதலால் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்ய இடம்பெறும் பிரச்சாரம், இந்தத் தாக்குதல்களுக்கு எதிரான போராட்டத்துக்கு தயார் செய்வதில் ஒரு அத்தியாவசிய நடவடிக்கையாகும்.

'புலிகள் இயக்கத்துடன் தொடர்பு' என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இந்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த பொய் குற்றச்சாட்டை இளைஞர்கள் நிராகரிக்கிறார்கள், பொலிசார் இளைஞர்களிடம் இருந்து பலாத்காரமான முறையில் 'ஒப்புதல் வாக்குமூலம்' கறக்கவும் முயல்கிறார்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுஜன முன்னணி-விடுதலை புலி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார தடைகளை நீக்கியது பற்றி அரசாங்கம் கூறிக்கொண்டவை உண்மையில் மாயாஜால நடவடிக்கைகளாகவே விளங்கின. ''லெ ரி சோதனை நிலையங்களில் ஏற்பட்டுள்ள தடைகளை போக்க'' ''சிவில் கமிட்டிகள்'' அமைக்கப்படவுள்ளதாக அரசாங்கம் ஏப்ரல் 15ல வெளியிட்ட அறிக்கை இதனை தெளிவுபடுத்தியது. வடமாகாணத்துக்கு எரிபொருள் அனுப்பும் தீர்மானம் ஏப்ரல் 14ம திகதியே வெளியானது. பூநகரியில் இருந்து இராணுவ முகாமை அகற்றும் கோரிக்கையை ''தற்போதைக்கு'' அமுல்செய்ய முடியாது என ஜனாதிபதி ஏப்ரல் 14ம் திகதி விடுதலைப் புலிகளின் தலைவருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தார். அத்தோடு ஜனாதிபதி தாண்டிக்குளத்தில் மேலதிகமாக இரண்டு சோதனை நிலையங்களை திறக்க உத்தரவிட்ட கதையும் அவரின் பாரிஸ் பயணத்துக்கு முந்திய ரூபவ ஹினிப் பேட்டியிலேயே வெளிவந்தது.

இவை எல்லாம் எதைக் காட்டுகின்றன? சமாதானத்தை நிர்மாணிக்கும் மக்கள் ஆணை கிடைத்தது பற்றிய வாயடிப்புக்களுக்கு பின்னணியில் பொதுஜன முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வந்தது. இருப்பினும் இப்பேச்சுவார்த்தை இலங்கை முதலாளி வர்க்கத்தின் இனவாத, இராணுவ ஆளுமையின் கீழ் விடுதலைப் புலிகளுடன் சமரசத்துக்குச் செல்லும் ஒரு நடவடிக்கையாக விளங்கியது. சந்திரிகா பண்டாரநாயக்க அரசாங்கத்தின முயற்சியாக இருந்ததும் தொடர்ந்தும் இருப்பதும் இலங்கை முதலாளி வர்க்கத்தின் ஆளுமையின் கீழ் தமிழ் முதலாளிகளுடன் சமரசம் செய்து கொள்வதன் மூலம் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான பிற்போக்குச் சக்திகளை அணிதிரட்டி ஏவிவிடுவதேயாகும். இதன்மூலம் ஏகாதிபத்திய முதலீட்டாளர்களை தருவிப்பதற்கான நிலைமைகளை சிருஷ்டிக்க அது துடிக்கின்றது.

கடந்த சில மாதங்களாக பொதுஜன முன்னணி அரசாங்கம் 'சமாதானத்தின்' பேரால் ஏகாதிபத்திய வங்கியாளர்களிடமும் நிதி நிறுவனங்களிடமும் முதலீட்டுக்கு ஆலவட்டம பிடித்து வந்தது. ஏப்ரல் 27 — 28ம திகதிகளில் பாரிசில் நடைபெற்ற 'உதவி வழங்கும் குழு'வின கூட்டத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி, தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் நசுக்கித் தள்ளும் இத்தகைய ஒரு எதிர்ப்புரட்சி முதலாளித்துவக் கூட்டினை உருவாக்கும் வாக்குறுதியின பேரால் 85 கோடி டாலர் கடனைப் பெற்றுள்ளார். பேச்சுவார்த்தைகள முறிவடைந்த நிலையிலும் கூட வடக்கு — கிழக்கை நிர்மாணிக்கும் பேரில் 400 கோடி ரூபா முதலீடுகளுக்கு வரும்படி வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாக தெரிகின்றது.

''யுத்தம் வெடிக்குமானால் நிச்சயமற்ற முதலீட்டு சூழ்நிலையினால் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டமும் பொருளாதார அபிவிருத்தி இலக்குகளும் தண்ணீரில் கரைந்துபோகும்'' என பிரபல கொள்கை ஆய்வு நிறுவனத்தின் கலாநிதி சமன் கெலேகம மோதல் தவிர்ப்பு உடைந்ததைத் தொடர்ந்து தெரிவித்துள்ளார். இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி இவ்வாண்டில் நூற்றுக்கு ஆறு வீதமாயும் 1996ல் நூற்றுக்கு 7 வீதமாயும் இருக்குமென ஆசிய அபிவிருத்தி வங்கி சமீபத்தில் குறிப்பிட்டிருந்தது. ஆனால் அதனை முழுப் பொருளாதார ஸ்திரப்பாட்டினாலும் பொதுப்பணிகளின் திறமையினாலுமே அடைய முடியும் எனக் கணக்கிடப்பட்டிருந்தது. விடுமுறை வெட்டு, அரச நிறுவனங்கள் அனைத்தும் தனியார்மயமாக்கம், சேமநல சேவைகள் ஒழிப்பு, ரூபா மதிப்பிறக்கம், நாடு பூராவும் சுதந்திர வர்த்தக வலய விஸ்தரிப்பு என்பவற்றுக்கு மத்தியில் 'கைத்தொழில் அமைதியை' உருவாக்கும் பொருட்டு விடுதலைப் புலிகளுடன் செய்யும் எதிர்ப்புரட்சி உடன்படிக்கையை ஒடுக்குமுறை தேவைகளுக்குப் பயன்படுத்த முடியும் என ஏகாதிபத்தியவாதிகளும் அதன் ஏஜன்டான சந்திரிகா குமாரதுங்க அரசாங்கமும் கணக்குப்போட்டது.

## புலிகளின் அரசியல் நெருக்கடி

விடுதலைப் புலிகள் தமது அரசியல் அத்திவாரமாக விளங்கிய தனித் தமிழ் ஈழம் அமைக்கும் முதலாளித்துவ தேசியவாத கோரிக்கையைக் 'கைவிட்டு' கொழும்பு ஆட்சியாளர்களுடன் சமரசத்துக்கு செல்லவும் தாம் தயார் என அறிவித்தது. இதற்குகாரணம் அவர்களின் அரசியல் முட்டுச் சந்தி பொதுமக்களிடையே அம்பலமாகும் ஒரு நிலைமை உருவானதே.

பேரம் பேசல்களில் இருந்து விடுதலைப் புலிகள் விலகிக் கொண்டதற்கான காரணம் என்ன? யுத்தத்தினை தொடர்ந்து நடாத்தும் தனிச்சிறப்பு வல்லமை இருப்பதோ அல்லது தமது இலக்கை அடைவதற்கான மாற்று வேலைத் திட்டம் உள்ளதாலோ அல்ல. சமாதானப்பேச்சுக்கள் எனச் சொல்லப்பட்டவற்றில் முதலாளித்துவ விதிமுறைகளுக்கு அமைவான ஒரு சமகணிப்பினைத் தானும் அவர்கள் பெற்றுக்கொள்ள முடியாது போனதே காரணம். இந்த அவமான நிலையை ஏற்பதானது தமிழ் பொதுமக்களின் கண்களின் எதிரில் தமது அந்தஸ்து ஜீ ஜீ பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம் மட்டுமலறி வரதராஜப் பெருமாளின் நிலையைவிடப் பெரிதும் குழிபறிந்து போகும் என்பதை விடுதலைப் புலிகள் இயக்க தலைவர்கள் அறிவர்.

தமிழ் முதலாளித்துவ விடுதலைப் புலிகள் இயக்கம் சலுகைப் பங்குக்காகவும் தமது பிராந்திய மக்களை சுரண்டித் தள்ளும் அதிகாரப் பங்குக்காகவும் போட்டியிடுகின்றது. விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகிக் கொண்டதற்கும் புதிய ஏவுகணைத் தாக்குதல்களில் இறங்கியுள்ளமைக்கும் காரணம அது ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைக் காக்கும் கருணையினால் உழல்வது அன்று. அவ்வாறே பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் சமாதான முயற்சியினுள் இனவாத சிங்கள முதலாளி வர்க்கத்தின் படுகேவலமான இலட்சணங்கள் அனைத்தும் சூழ்கொண்டுள்ளன. இது பேச்சுவார்த்தைகள் சிதறுண்டதை அடுத்த மறுகணமே வெளியரங்குக்கு வந்துள்ளது.

இந்த 'சமாதானம்' சம்பந்தமாக ஏகாதிபத்தியவாதிகள் காட்டும் அக்கறை அதன எதிர்ப்புரட்சி இலட்சணத்தைக் காட்டிக்கொண்டுள்ளது. மோதல் தவிர்ப்பு உடைந்ததை அமெரிக்க, ஐரோப்பிய, ஜப்பானிய ஏகாதிபத்திய அரசுகள் சாடியுள்ளதோடு பேச்சுவார்த்தை மீண்டும் தொடரவேண்டும் எனவும் நெருக்கியுள்ளன. அமெரிக்க இராஜாங்க திணைக்களம் ''விடுதலைப் புலிகள் மோதுதலை ஆரம்பிக்க எடுத்துள்ள தீர்மானம் ஒரு தசாப்த காலத்துக்கு மேற்பட்ட யுத்தத்தினை முடித்து வைக்கும் இலங்கை மக்களின் எதிர்பார்ப்புக்கு ஒரு அச்சுறுத்தலாகும். சமாதான நடவடிக்கைகள் இறுதியில் பொறிந்து போகுமானால் அதற்கான பொறுப்பை விடுதலைப் புலிகள் ஏற்க வேண்டும்'' என்றது.

தென் ஆசியாவில் இராணுவ பலத்தைப் பலப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளதோடு அதன் ஒரு பாகமாக ஆரவிலவில் 'அமெரிக்காவின் குரல்' (VOA) நிலையத்தை நிர்மாணித்து வரும் அமெரிக்க ஆளும வர்க்கம இந்த அறிக்கை மூலம் தமது நேரடியான தலையீடுக்கான சாத்தியமும உண்டு என்பதை சமிக்ஞை செய்துள்ளது. சந்திரிகா பண்டாரநாயக்க அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தத்தம அவசியங்களின் பேரில அத்தகைய ஏகாதிபத்திய தலையீடுகளுக்கு அழைப்பு விடுக்கும் சாத்தியம உள்ளது.

இனவாத யுத்தத்தினை நிறுத்துவதும் 'சமாதானத்தை' ஏற்படுத்துவதும் தமிழ் ஒடுக்கப்படும மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்தம செய்து தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக தயார் செய்யப்படும எதிர்ப்புரட்சி தாக்குதல்களைத் தோற்கடிப்பதோடு இணைந்த ஒரே போராட்டமாகும். சுரண்டல் சலுகைகளுக்கான பேரம் பேசல்களில ஈடுபட்டு வரும் சிங்கள — தமிழ் முதலாளிகள் யுத்தத்தினதும் 'சமாதானத்தினதும்' பேரால் முன்வைக்கும் எதிர்ப்புரட்சி திட்டங்களைத் தோற்கடிக்க இலங்கை — தமிழ் ஈழம் தொழிலாளர் வர்க்கம் தமது வர்க்க ஐக்கியத்தை உறுதி செய்வதோடு ஒடுக்கப்படும் சகல மக்கட் பகுதியினரையும் தம்மைச் சூழ அணி திரட்டி முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கி வீசும் போராட்டத்தில் இறங்க வேண்டும். தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதி செய்வதும் இலங்கை - தமிழ் ஈழம் சோசலிச குடியரசை அமைப்பதும் அவர்களின் எதிரில உள்ள வேலைத் திட்டமாகும். இதற்கு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் சழகம் தோள் கொடுக்கிறது.

## இனவாத யுத்தத்தையும் வேட்டையையும் எதிர்ப்போம்!

பொதுஜன முன்னணி அரசாங்கம் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிராகக் கட்டவிழ்த்து விட்டுள்ள இனவாத யுத்த தாக்குதல்களையும் காட்டுமிராண்டி வேட்டையையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் சழகமும் தொழிலாளர் பாதையும் வன்மையாகக் கண்டனம் செய்கின்றன. அரசாங்கமும், முதலாளித்துவ அரச இயந்திரமும் முதலாளித்துவ பொதுஜனத் தொடர்புச் சாதனங்களும் பல்வேறு இனவாத சக்திகளும், நடாத்திவரும் நச்சுத்தனமான பிரச்சாரத்தினால் வழிதடுமாற வேண்டாமெனவும் தமிழ் ஒடுக்கப்படும் மக்களை காக்கும் முன்னணியில் நிற்க முன்வருமாறும் பு.க.க. இலங்கை தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களை வேண்டுகின்றது. இந்த இனவாத தாக்குதல்களின் பின்னணியில் இரு தேசிய இனங்களதும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின உரிமைகளை துடைத்துக்கட்டும் எதிர்ப்புரட்சி திட்டத்தினை முதலாளி வர்க்கமும் அதன் அரசாங்கமும் முன்னணிக்கு கொணர்ந்துள்ளது என நாம் எச்சரிக்கிறோம்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயான மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை சிதறுண்டு விடுதலைப் புலிகள் கடற்படையினர் மேல் தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து அரசாங்கம் வடக்கு மாகாணத்தின் மீதான பொருளாதார தடையை மீண்டும் அமுலுக்குக் கொணர்ந்தது. பொருளாதார தடையை அகற்றிவிட்டதாக அரசாங்கம் கூறிக்கொண்ட போதிலும் வடக்குக்கான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விநியோகம் இடம்பெற்றுவராத ஒரு நிலையில் இது இடம்பெற்றுள்ளது. அத்தோடு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரினால் வடக்கில் இடம்பெயர்ந்துள்ள 56,000 அகதிகளுக்கென அனுப்பப்பட்ட 30,000 தொன் அரிசி, மாவு, பருப்பு, சீனி, பால்மா ஆகியவற்றை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறை நோக்கிச் சென்ற கப்பல் கடற்படையினரால் தமது பாவனைக்கென திசைதிருப்பப்பட்டுள்ளது. இக்கப்பல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் அனுப்பிவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஏப்ரல் 23ல் இராணுவத்தினர் ஒலுப்பைக் குளம் கிராமத்தில் 14 வீடுகளை புல்டோசர் கொண்டு தரைமட்டமாக்கியதாக த. வி. கூ. எம். பி. தங்கத்துரை ஜனாதிபதிக்கு முறைப்பட்டுள்ளார். ஏப்ரல் 24ல் தொண்டமனாற்றில் விமானப்படையினர் நடாத்திய தாக்குதலில் 7 கிராமவாசிகள் படுகாயம் அடைந்ததோடு இந்த விமானப்படை தாக்குதலால் அச்சுவேலிப் பகுதியில 5000 மக்கள் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் இராணுவத்தினரும் பொலிசாரும் நடாத்திய 'சுற்றிவளைப்புக்களால்' 1500க்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் கைதுசெய்யப்பட்டதோடு, 250 பேர் விடுதலைப் புலிகள் 'சந்தேக நபர்களாக' தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன. ஏப்ரல் 30ல் பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை காலி வீதியூடாக பயணம் செய்த சகல தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் பொலிசாரினாலும் ஆயுதப்படைகளாலும் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். தோட்டங்களில் நிலவும் வேலையின்மையால் தலைநகர் வந்து ஹோட்டல்களிலும் மற்றும் இடங்களிலும் தொழில் புரிந்து வந்த இளைஞர்கள் அடையாள அட்டை பிரச்சினையால தொழில்களை கைவிட்டு திரும்பவும் தோட்டங்களுக்கு செல்ல நேரிட்டது இவர்கள் உரிய சம்பள பாக்கி இல்லாமல் முதலாளிகளால் வெளியேற்றப்பட்டனர்.

வீட்டுச் சொந்தக்காரர்களும், லொட்ஜ் உரிமையாளர்களும் வடக்கில் இருந்து கொழும்பு வருவோருக்கு தங்குமிட வசதி வழங்க தயக்கம் காட்டியுள்ளனர். 'ஐலன்ட்' போன்ற இனவாத பத்திரிகைகள் 'லொட்ஜ்'களை இழுத்து மூடும்படி பொலிசார் கூறும் செய்தியை முன்னணியில் நின்று வெளியிட்டன. இந்த இனவாத பிரச்சாரத்துக்கு முத்தாய்ப்பு வைக்கும் விதத்தில் ஜனாதிபதி 'இந்தியா டுடே' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் விடுதலைப் புலிகள் படுகொலை பட்டியலில் தமது பெயரையும் சேர்த்துக் கொண்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்கள் மாநாடு: தொ

## "தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களுக்கு புதிய முன்நோக்கும் தலைமையும் அவசியம்"

### - பு. க. க. பொதுச் செயலாளர் விஜே டயஸ்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினால் மார்ச் 19ம் திகதி கொழும்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்ட தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்கள் மாநாட்டில் அனைத்துலக சோசலிசத்துக்கான புரட்சிகர வேலைத்திட்டத்தினையும் அரசியல் முன்நோக்கினையும் முன்வைத்து பு. க. க. பொதுச் செயலாளர் தோழர் விஜே டயஸ் நிகழ்த்திய உரை இங்கு பிரசுரமாகின்றது.

தோழர், தலைவர், தோழர்களே, தோழியர்களே!

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினால் நடாத்தப்படும் இம்மகாநாட்டின் தொடக்கத்தில் நான் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் தோழமைக் கட்சியான இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகத்திடமிருந்து கிடைத்துள்ள நல்வாழ்த்துச் செய்திகளை சமர்ப்பிக்க விரும்புகின்றேன்.

அந்த நல்வாழ்த்துச் செய்திகளை செவிமடுத்த நீங்கள் இலங்கை — தமிழ் ஈழம் தொழிலாளர் வர்க்கம் முகம் கொடுத்துள்ள தீர்க்கமான வரலாற்றுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் போராட்டத்தில — சிறப்பாக இந்தியத் துணைக் கண்ட தொழிலாளர் வர்க்கத்தினை அணி திரட்டுவதில் இந்த நல்வாழ்த்துச் செய்தி முக்கிய இடம் வகிப்பதை புரிந்து கொண்டிருப்பீர்கள்.

கடந்த ஆகஸ்ட் 16ம் திகதிய பொதுத் தேர்தலின் பின்னர் ஆளும வர்க்கம ஜனாதிபதி விஜேதுங்கவின் தலையீட்டுடன் ஒரு இராணுவ — பொலிஸ் அரசாங்கத்தினை கட்டியெழுப்ப இராணுவத்தினதும் பொலிசினதும் முன்னணியில இரண்டு நாட்கள் சதிகளில் ஈடுபட்டதன் பின்னர் பொதுஜன முன்னணி அரசாங்கத்திடம் ஆட்சியை ஒப்படைத்து இன்றுடன் சரியாக 7 மாதங்கள் ஆகின்றன. ஜனாதிபதி தேர்தலின் பின்னர் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகி இப்போது மூன்று மாதங்கள் ஆகின்றது. வரலாற்றுக் கோணத்தில் இருந்து பார்க்குமிடத்து இக்காலப்பகுதி ஒரு குறுகியதாக இருப்பினும இக்காலப் பகுதியினுள் முதலாளித்துவ ஆளும் வர்க்கம் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின மூலம நடைமுறைப்படுத்திய வேலைத்திட்டத்தின் காட்டுமிராண்டித்தனம் இந்நாட்டுக்கும் முழு உலகுக்கும் நன்கு அம்பலமாகிஉள்ளது.

## தீர்க்கதரிசனம்

இச்சமயத்தில் நடைபெற்ற தேர்தல்களின் பின்னர் தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்கள் முகம் கொடுக்க நேரிடும் நிலைமைகளையிட்டு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தீர்க்க தரிசனமாகக் குறிப்பிட்டவற்றை நினைவு கூர்வது பெரிதும பொருத்தமானது. ஆகஸ்ட் 16ம் திகதிய பொதுத் தேர்தல் தொடர்பாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனம் பின்வருமாறு குறிப்பிட்டது:

"உழைக்கும் மக்களே! ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளதும் இடது கோலம் பூண்டுள்ள அவர்களின் கைக்கூலிகளதும் மோசடிகளுக்கு ஏமாந்து போகாதீர்கள்! யூ.என் பி. — சி.ல சு. க, 'பொதுஜன முன்னணி'களும்' முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் ஊளையிடுவது போல் இன்று பொதுத் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதன் நோக்கம் ஜனநாயக உரிமைகளை வழங்கவோ அல்லது ஜனநாயகத்தை உத்தரவாதம் செய்யவோ சந்தர்ப்பம் வழங்குவது அல்ல. இந்த முதலாளித்துவக் கட்சிகள் தேர்தலை மோசடிகள், கதையளப்புக்கள், வெளிப் பூச்சுப் பேச்சுக்கள் மூலம் குழம்பிப் போயுள்ள மத்தியதர வர்க்கப் பகுதியினரைத் தமது கட்சிகளைச் சூழ அணிதிரட்டிக் கொண்டு, அரசியல் அதிகாரத்துக்குப் பாய்ந்து கொள்வதன் மூலம் மிலேச்சத் தாக்குதல்களினால் திரும்பவும் பொறுமை இழந்து போயுள்ள தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள் மீது பாசிசத் தாக்குதலைக் கட்டவிழ்க்கப் பயன்படுத்த உள்ளன. அதன் மூலம் ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களின் மிலேச்சச் சுரண்டலுக்கான நிலைமைகளை பேணும் மேலும் உத்தரவாதம் செய்ய முயல்கின்றன."

இன்று இவற்றில் பல நூற்றுக்கு நூறு வீதம் நிரூபிக்கப்பட்டு உள்ளன. அத்தோடு ஆகஸ்ட் 16ம் திகதி தேர்தலின் பின்னர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் இளம் சோசலிஸ்டுகளும் 'பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கீழ் தொழிலாளர் வர்க்கம் முகம் கொடுக்கும் ஆபத்துக்கள்" என்ற தலைப்பில் நாடுபூராவும் நடத்திய விரிவுரைகளில் நாம் இவற்றை மீண்டும ஒரு தடவை வலியுறுத்தினோம்: அத்தோடு பெப்ரவரியில் நாம் வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு சுட்டிக்காட்டினோம்: "உற்பத்திச் சக்திகளின் அபிவிருத்தியானது தேசிய அரச எல்லைகளையும் அச்சக்திகளின் முதலாளித்துவ உரிமையையும் சவாலுக்கு உள்ளாக்கும் ஒரு நிலையையில் காலனித்துவத்துக்காக இன, தேசிய மோதுதல்களை தூண்டுவதை ஒருபுறத்திலும் உற்பத்திச் சக்திகளை ஒழித்துக் கட்டுவதற்காக உலக யுத்தத்தினை மறுபுறத்திலும் தயார் செய்யும் ஏகாதிபத்திய, ஏகாதிபத்தியச் சார்பு ஆளும் வர்க்க திட்டங்களுக்கு எதிரான ஒரே பதிலீடு உலக சோசலிசமே. தேசிய அரச எல்லைகளைக் கடந்து பல்வேறு தேசிய, இன மக்களை ஒன்றிணைக்கும் சோசலிச குடியரசு ஒன்றியத்தினை கட்டி எழுப்பும் பொருட்டு பிற்போக்கு ஆட்சிகளைத் தூக்கி வீசும் போராட்டத்துக்கு தொழிலாளர் வர்க்கம் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டிக் கொண்டு முன்செல்ல வேண்டும். இந்தியத் துணைக் கண்ட சோசலிசக் குடியரசின் ஒரு பாகமாக இலங்கை — தமிழ் ஈழம் குடியரசுக்காக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொடுத்துள்ள போராட்டம் அந்த உலக முன்நோக்கினை அடிப்படையாகக் கொண்டது."

## எதிர்வுகூறலின் பலம்

கடந்த ஒரு சில மாதங்களுள் பு.க.க. தமது பத்திரங்கள், விரிவுரைகள் மூலம் தொழிலாளர் வர்க்கத்துக்கு எடுத்துக் கூறியவற்றை இவ்வாறு ஞாபகம் படுத்தியதன் நோக்கம் எமது இயக்கத்தின் கோட்பாட்டு, அரசியல் முன்நோக்கின் பலத்தினை மீண்டும் ஒரு தடவை நினைவூட்டவே. 27 ஆண்டுகளாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்நாட்டினுள் நடாத்திய அரசியல் போராட்டத்தின் அனுபவத்தின் அடிப்படையில் எம்மால் அந்த அறிக்கைகளை வெளியிட முடிந்ததற்குக் காரணம் நாம் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ட்ரொட்ஸ்கியினால் தெளிவுபடுத்தப்பட்ட வர்க்கப் போராட்டத்தின் மூலோபாய படிப்பினைகளை அடிப்படையாகக் கொண்டிருந்ததேயாகும்.

திட்டவட்டமாகச் சொன்னால் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அரசியல் முன்நோக்கின் கோட்பாட்டு மையமான நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் நின்று நடாத்திய நீண்ட போராட்டத்தினுள் உலக முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடி, வீழ்ச்சி பற்றியும, ஆளும் வர்க்கத்தின் காட்டுமிராண்டி முயற்சிகள் பற்றியும் இந்த முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தை தொடர்ந்தும் ஆட்சியில் வைத்திருக்க துடிக்கும் கேவலம் தலைமைகளின் பிற்போக்கு பற்றியும் நாம் புரிந்து கொண்டுள்ளோம். ஆதலால் முன்கூட்டியே பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் எதிர்ப்புரட்சித் தன்மையையிட்டு சந்தேகம் தெரிவிக்க எம்மால் முடிந்தது.

## இனவாத யுத்தம்

17 ஆண்டுகள் நீடித்த யூ.என்.பி. ஆட்சியின் கீழே தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இனவாத யுத்தத்தினாலும் பொலிசையும் இராணுவத்தையும் கட்டவிழ்த்துவிட்டு தெற்கில் இலட்சக் கணக்கானோரை வேட்டையாடியதன் மூலமும் சாதிக்க முடியாது போன ஆட்சி நெருக்கடியானது சமசமாஜ, ஸ்டாலினிச, நவசமசமாஜ, இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி, தொழிற்சங்க அதிகாரிகள், வெகுஜனத் தொடர்பு சாதனக்காரர்கள் மட்டுமலறி ஜே.வீ,பி. காரர்களும் தோள் கொடுத்ததன் மூலம் பொதுஜன முன்னணியை ஆட்சிக்குக் கொணர்ந்துள்ளது.

நான்காம் அகிலத்தின் பத்திரமான இடைமருவு வேலைத்திட்டத்தில் ட்ரொட்ஸ்கி சுட்டிக்காட்டியதுபோல் நாற்றம் கண்ட முதலாளித்துவ அமைப்பின் நிர்வாகம் ஒருபுறத்தில் இராணுவ — பொலிஸ் பாசிச சர்வாதிகாரத்திலும் மறுபுறத்தில முதலாளித்துவ மக்கள் முன்னணியிலும் தங்கியுள்ளது என்பதை நாம் இங்கு கண்டுகொண்டுள்ளோம். இந்த இரண்டு துரும்புகளையே ஆளும் வர்க்கம் ஆட்சியை காண்டிழுக்க பயன்படுத்துகின்றது. மாறி மாறி இந்த ஆட்சி முறைகளைப் பயன்படுத்தி மக்களை ஏமாற்ற ஆளும் வர்க்கம் முயன்றாலும் அது முகம் கொடுத்துள்ள நெருக்கடியில் இருந்து தலையெடுக்கப் போவதில்லை. முதலாளித்துவ உல...
தின் வீழ்ச்சி அதற்கு இடமளிப்பதா...




பொதுஜன முன்னணி அரசாங்...
வரவு செலவுத் திட்டத்தை சமீப...
சுருங்கச் சொன்னா... யூ. என். ...
இருந்து பிடுங்கிக் கொள்ள முடியாத...
பிடுங்கிக் கொள்ள பொதுஜன முன்...
ளது. சகல நிறுவ...களையும் த...
பொதுஜன முன்னணி வாக்குறுதி அ...
வாய்ப்பான இலாப வீதத்தினை ஓ...
அலைத்து கொண்டுள்ள மூலதனத்தி...
இந்நாட்டு மக்களை மாற்றுவதே ...
கடந்த காலத்தில் ட்ரான்ஸ் நஷன...
இலங்கையினுள் வரையறுக்கப்பட்ட ...
சுதந்திர வர்த்தக வலயங்களில் — ...
மானால் இன்று பொதுஜன முன்ன...
அதற்கான நிலைமைகளை உருவாக...
ளது. அதன் ஆரம்பமாக சுதந்திர ...
உற்பத்தி செய்யப்படும் பொ...
இந்நாட்டின் சந்தைக்குள் புகுத்த அ...

ஆதலால் சுதந்திர வர்த்தக வ...
தற்கு முன்னர் இருந்து வந்த தேசியப்...
கட்டியெழுப்புவோ...ன்ற முத...
முற்றிலும் மோசடியானது என்பதை...
இதன்மூலம் தொழிற்சங்கப் போரா...
காலப் பகுதியில் தொ...லாளர் ...ர்
உரிமைகள் பறிக்கப்பட... உள்ளன, இ...
தக வலய தொழிலாளர்களை ஒத்த ...
தொழிலாளர்களையும் கொணரத் ...
ளது. இதனால் பூகோளமயமாக்கப்ப...
யினுள் இலங்கையின் சகல தொழி...
நுழைக்கப்படுவர். இந்நிலையை இ...
காக்கும் பொருட்டு உலகளாவிய ரீ...
னல் கூட்டுத்தாபனங்கள் விதிக்கும்...
கீழ்ப்பட்டு சேவை செய்வதைவிட ...
தொழிலாளர் பிரிவினருக்கும் கிட்ட...
வர்க்கம் நனவான முறையில் அ...
அடிப்படையில் காலூன்றி, உலகப் ...
அணிதிரள வேண்டியதன் அவசியத...
வேறு புறநிலை காரணி இருக்க மு...

இந்நிலைமையில் பல்வேறு அர...
முதலாளித்துவ எழுத்தாளர்களும் ...
லிசம் காலவதியாகிவிட்டது', 'தொ...
படும் மக்களுக்கு அந்நியமாகிவிட்டது...
களை கோசிப்பதை நாம் கேட்கி...
பொதுஜன முன்னணி ஆலோசகரா...
கொடவும் அடங்குவார். 'சோசலிச...
கட்டியெழுப்புவது இடதுசாரிகளின்...
இன்று இருக்க முடியாது' என 'யு...
எழுதிய கட்டுரையொன்றில் அவர் ...
சந்திரிகா குமாரதுங்க பாராளுமன்...
மார் சம்மேளனங்களிலும் வாந்தியெ...
சகர்களின் ஆலாசனையே என்பது ...
ஸ்டாலினிச, நவசமசமாஜ, இ.தொ...
தொழிலாளர் வர்க்கத்துக்கு உபதேச...
றுக்குச் சமானமானவையே. இச் சகல...
லிசத்தை ருசுப்படுத்த முடியாது; ...
முயற்சிக்கக் கூடாது; முதலாளித்துவ...
லீடு தொழிலாளர், ஒடுக்கப்படும் ம...
என உபதேசம் செய்கிறார்கள்.

## தொழிலாளர் வர்க்கத்தின் வரலாற்று அவசியம்

இவ்விடயம் தொடர்பாக இற்றை...
டுகளுக்கு முன்னர் பிளாக்கானோவ் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு பொது நூலகம் மார்ச் 19




மாநாட்டில் அரசியல் அறிக்கையை முன்வைத்து பு.க.க. பொதுச் செயலாளர் விஜே டயஸ் உரை நிகழ்த்துகின்றார்

வ உலகப் பொருளாதாரத்
ரிப்பதாய் இல்லை

ரசாங்கம் அதன் முலலாவது
சமீபத்தில் சமர்ப்பித்தது.
ன். யினால் மக்களிடம்
டியாது போன சகலதையும்
முன்னணி சபதம் பூண்டுள்
ம் த ர்மயமாக்குவதாக
றுதி அளித்துள்ளது. மிகவும்
ன ஒரு உலகம் பூராவும்
தனத்தின் பலிகடாக்களாக
வதே அதன் இலக்காகும்.
நஷனல் கூட்டுத்தாபனங்கள்
பட்ட பிராந்தியங்களில் —
ல் — மட்டும் பாய்த்திருக்கு
முன்னணி நாடு முழுவதிலும்
ருவாக்கித் தர முனவந்துள்
ந்திர வர்த்தக வலயங்களில்
பொருட்களில் 10%ஐ
ந்த அனுமதி வழங்கியுள்ளது.
தக வலயம் அமைக்கப்படுவ
தசியப் பொருளாதாரத்தை
முத ளித்துவ பிரச்சாரம்
ளபதை இது காட்டுகின்றது.
போராட்டங்கள் மூலம் அக்
ர் வர்க்கம் வென்றெடுத்த
ன, இன்று சுதந்திர வர்த்
ஒத்த நிலைமைக்கு ஏனைய
ணரத் திட்டமிடப்பட்டுள்
க்கப்பட்ட உழைப்பு சந்தை
தொழிலாளர் பிரிவினரும்
ய இலாபப் பொதிகளைக்
விய ரீதியில் ட்ரான்ஸ் நஷ
திக்கும் நிபந்தனைகளுக்கு
விட வேறு வழி எந்தவொரு
கிட்டாது. தொழிலாளர்
அனைத்துலகவாதத்தின்
லகப் புரட்சிகரச் சக்தியாக
வசியத்தை தெளிவுபடுத்த
க்க முடியுமா?

அரசியல் போக்குகளும்
ரும் 'மார்க்சிசம் — சோச
'தொழிலாளர் — ஒடுக்கப்
ட்டது' போன்ற கோசங்
கேட்கிறோம். இவர்களுள்
சகரான ஜயதேவ உயங்
சலிசத்தினை இலங்கையில்
ரிகளின் நிகழ்ச்சி நிரலில்
'யுக்திய' பத்திரிகைக்கு
அவர் குறிப்பிட்டிருந்தார்.
ளுமன்றத்திலும் முதலாளி
ந்தியெடுப்பது இந்த ஆலோ
ளபது தெளிவு. சமசமாஜ,
.தொ.கா. தலைவர்களும்
பதேசம் செய்வதும் இவற்
சகல துரோகிகளும் சோச
து; ஆதலால் அதற்காக
த்துவத்தை விட வேறு பதி
நும் மக்களுக்கு கிடையாது
.

ின்

இற்றைக்கு ஒரு நூற்றாண்
னாவ் மிகவும் புகழ்வாய்ந்த

விதத்தில் இத்தகைய துரோகிகளுக்கு பதில் அளித்துள்ளார்: அவர் மிகவும் சுருக்கமான விதத்தில் அவ்விடயத்தினை பற்றிய வரலாற்று சாராம்சத்தினை வெளியரங்குக்கு கொணர்ந்தார்.

''சோசலிசத்துக்கு தொழிலாளர் வர்க்கம் அவசியம் அல்ல; தொழிலாளர் வர்க்கத்துக்கு சோசலிசம் அவசியம்.'' நரோட்னிக்குகள் கூறிக்கொண்டதன்படி சோசலிச திட்டங்களுக்கு உதவி வழங்கும் சக்திகளாக தொழிலாளர் வர்க்கத்தினை ஈடுபடுத்துவது அல்ல; சோசலிசம் தொழிலாளர் வர்க்கத்தின் வரலாற்று அவசியம் என பிளாக்கானோவ் தெளிவுபடுத்தினார்.

உலகம் பூராவும் உள்ள முதலாளித்துவச் சார்பு துரோகிகள் தொழிலாளர் வர்க்கத்தினை இந்த வரலாற்று அவசியங்களில் இருந்து விலக்கி வைக்கவும் அதற்குக் குழி பறிக்கவுமே முயற்சிக்கின்றனர். அந்த வரலாற்று அவசியங்களில் இருந்தும் முன்நோக்கில் இருந்தும் விலக்கி வைத்ததும் தொழிலாளர் வர்க்கம் முதலாளித்துவத்துக்கு கீழ்ப்பட்ட ஒரு அடிமைப் படையாக மட்டுமே இருக்கும். தனியார்மயத்தின் கீழ் இலட்சோப இலட்சம் தொழிலாளர்கள் வேலைகளை இழக்கும் போதும், அவர்களின் வாழ்க்கை நாசமாக்கப்படும் போதும் தொழிலாளர் வர்க்கத்தின் உயிரைக் காப்பது சோசலிசம் அன்றி வேறெதுவாக இருக்க முடியும்? முதலாளித்துவத்தினால் தொழிலாளர் வர்க்கத்தின் ஆறைந்தபட்ச அவசியங்களைத் தன்னும் இட்டுநிரப்ப முடியாதுள்ள ஒரு நிலைமையில் தொழிலாளர் வர்க்கத்தின் விடுதலைக்காக உள்ளது சோசலிசம் அன்றி வேறென்ன?

இந்த வரலாற்று அவசியத்தினை தொழிலாளர் வர்க்கம் நனவான முறையில் புரிந்து கொள்வதை தடை செய்யும் பொருட்டு துரோகத் தலைவர்களைப் பாவித்து ஆளும் வர்க்கம் — பொதுஜன முன்னணி — செயற்படுவது உண்மை. இந்நாட்களில் பொருட்களின் விலை குறைப்பு பற்றி பத்திரிகைகளில் பெரும் கா... கூ... இடம்பெற்றது. இதற்கான ஒரு உத்தரவாதமாக பாண் விலைக் குறைப்பு முன்வைக்கப்பட்டது. பாண் விலை குறைக்கப்பட்டு இரண்டு, மூன்று மாதங்கள் செல்வதற்குள் அமைச்சரவை அந்தச் சலுகையை அகற்றிவிடுவது பற்றி கலந்துரையாடி வருகின்றது, இன்று இரண்டு வகையான பாண்களை விநியோகிப்பது பற்றிப் பேசப்பட்டு வருகின்றது ஏழைகளுக்கு 3/50 பாண். சொத்துப்பத்துள்ள விலைகளை தாங்கக் கூடியவர்களுக்கு 5/50 பாண். இந்த விலைகளின் படி பாண் சந்தைக்கு வரும் போது அது முதலாளிகளின் வயிற்றை நிரப்பும் பாணாகவும் ஏழைகளின் வயிற்றைக் குடையும் பாணாகவும் இருக்கும் என்பதை புரிந்து கொள்வது கஷ்டம் அல்ல.

இது பகிடியாகத் தோன்றினும் இது வரலாற்றில் நடக்காத ஒன்று அல்ல. இரண்டாம் உலக யுத்த காலத்தில் முதலாளிகளுக்கு சோறு! ஏழைகளுக்கு பஜிரி! இது இந்நாட்டிலும் நடந்தது, பொதுஜன முன்னணி அரசாங்கம் ஏழை — பணக்காரர் வர்க்க வேறுபாட்டை சகல சாப்பாட்டு வேளைகளிலும் நுழைக்க முயலும். மக்கட் படுகொலை ஆட்சியாளர்கள் என்பதற்கு அது நல்ல சாட்சி. முதலாளித்துவ அமைப்பு கண்டுள்ள வீழ்ச்சியின் காரணமாக இவை உலகளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றன. வீழ்ச்சி கண்டு வரும் முதலாளித்துவ உலகப் பொருளாதார அமைப்பின் ஒரு தொடுவையாகவே இலங்கைப் பொருளாதாரம் இருந்து வருகின்றது.

இலங்கையின் வர்த்தக நிலுவையைப் பார்த்தால் இது நன்கு தெளிவு. 1994ன் முதல் 11 மாதங்களுள் இலங்கையின் வர்த்தக நிலுவை பற்றாக்குறை 74.5 பில்லியன் ரூபாக்களாகும், 7450 கோடி ரூபாக்களாகும். இது 1993ல் வர்த்தக நிலுவையைக் காட்டிலும் 46.7% அதிகமாகும். இக்காலப் பகுதியில் இலங்கைக்குக் கெகணரப்பட்ட பொருட்களின் பெறுமதி 22 வீதத்தினால் அதிகரித்தது.

ஏற்றுமதி பொருட்களின் பெறுமதி 12 வீதத்தினால் மட்டுமே அதிகரித்தது. இறக்குமதிப் பொருட்களின் விலையின் அரைவாசியால் மட்டுமே ஏற்றுமதிப் பொருட்களின் விலை அதிகரித்தது.

இலங்கையின் பொருளாதாரத்தின் கணக்கு வழக்குகளை ஆய்வு செய்த ஏசியா செக்கியூரிட்டீஸ் நிறுவனம் ஆடைக் கைத்தொழிலில் பிரமாண்டமான வீழ்ச்சியை சுட்டிக்காட்டியுள்ளது. இதனால் வர்த்தக நிலுவைப் பற்றாக்குறை பிரமாண்டமான அளவில் உக்கிரம் அடையும். இந்த வர்த்தக நிலுவைப் பற்றாக்குறையானது ஆளும் வர்க்கத்தை ரூபாவின மதிப்பை பெருமளவில் மதிப்பிறக்கம் செய்யும்படி நெருக்கும், இத்தகைய பிரமாண்டமான அளவிலான ரூபா மதிப்பிறக்கத்தினை எதிர்பார்த்த வண்ணம் பாய்ந்துகொண்டு விழலாம் என பங்குச் சந்தை முதலாளிகள் உள்ளனர்.

## உலக நிலைமை

இது இலங்கைக்கு மட்டும் உரிய ஒரு சிறப்பு நிலைமை அல்ல. உலகம் பூராவும் உள்ள சகல நாடுகளும் இந்த பொருளாதார வீழ்ச்சிக்கு பலியாகி வருகின்றன. மார்ச் 15ம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட இந்திய காங்கிரஸ் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் 57634 கோடி ரூபா துண்டு விழுந்தது. நிதி அமைச்சர் மன்மோகன்சிங் ஏகாதிபத்திய வங்கியாளர்களின் கடன் பங்காகவும் வட்டியாகவும் 52,000 கோடி ரூபாக்களை ஒதுக்கியுள்ளார். 95/96 ஆண்டினுள் மக்கள் மீது சுமத்தப்படும் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையில் நூற்றுக்கு 90 வீதம் ஏகாதிபத்திய வங்கியாளர்களுக்கு செலுத்தப்படுகின்றது. மறுபுறத்தில் உணவு மானியமாகவும் இந்திய ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கும் சலுகையாகவும் 10058 கோடிகள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தவிதத்தில் ஏகாதிபத்திய வங்கியாளர்களுக்கு செலுத்துவதில் 1/5 பங்கு மட்டுமே மக்களுக்கும், கைத்தொழில்களின் அபிவிருத்திக்குமென வழங்கப்படுகின்றது. இந்த உதவி மானியம் என்ன தெரியுமா? வயதுபோன ஆண்களுக்கும் பெண்களுக்கும் மாதம் ரூபா 75/- அதாவது ஒரு நாளைக்கு ரூபா 2/50. இந்திய நிலைமையின்படி இதைக்கொண்டு 2 1/2 கோப்பை தேநீர் மட்டுமே குடிக்க முடியும். இந்த 2 1/2 கோப்பை தேநீரைக் கொண்டு முதியோரின் உயிரைப் பிடித்து வைக்க முடியுமா?

1990ன் பின்னர் கழிந்து சென்ற நான்கு ஆண்டுகளுள் அமெரிக்க டாலர் 40 வீதம் மதிப்பிறக்கம் செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் உலக யுத்தத்தின் இறுதியில் உலக ஏகாதிபத்திய அமைப்பின் புனருத்தாரண நடவடிக்கைகளைப் பொறுப்பேற்கும் போது டாலர், 360 யப்பானிய யென்னுக்குச் சமமாக இருந்தது. 1971ல் பிரெட்டன் வூட்ஸ் உடன்படிக்கை வீழ்ச்சி கண்டதை தொடர்ந்து அது 244 யென் மட்டத்தில இருந்தது. ஆனால் கடந்த வாரத்தில் டாலர் 88 யென் மட்டத்துக்கு வீழ்ச்சி கண்டுள்ளது. இவ்வாண்டின் 2 1/2 மாதங்களுள் டாலர் மார்க், யென் நிதிகளுக்கு சமாந்தரமாக 15 வீதத்தினால் மதிப்பு வீழ்ச்சியடைந்துள்ளது. உலக முதலாளித்துவ அமைப்புக்கு முண்டு கொடுக்கக்கூடிய வேறு ஒரு நாணய அலகு இல்லாத நிலைமையிலேயே டாலர் வீழ்ச்சி கண்டு வருகின்றது. ஜேர்மன் மார்க்கும் சரி யப்பானிய யென்னும் சரி டாலருடன் தொடர்புபட்ட முறையில் சிறிது சக்தியைக் காட்டிக் கொண்டாலும் அவை உலக பொருளாதாரத்துக்கு முண்டு கொடுக்க கூடிய நாணயங்கள் அல்ல.

டாலரின் இந்த வீழ்ச்சிக்குச் சமாந்தரமாக பின்தங்கிய நாடுகளில் பண்டங்களின் விலைகள் எட்டிப் பிடிக்க முடியாத கட்டத்துக்கு உயர வேண்டியுள்ளது. மெக்சிக்கோவில் பெசோ நாணயம் மதிப்பிறக்கம் செய்யப்பட்டதன் பின்னைய இரண்டு வாரங்களின் பின்னர் ஸ்பானிய, போர்த்துக்கல் நாணயங்கள் மதிப்பிறக்கம் செய்யப்பட்டன. அது மட்டுமன்றி இத்தாலியில் லிராவும் பிரித்தானிய பவுணும் சுவீடனின் கிரவுணும் வீழ்ச்சி கண்டன. இந்திய ரூபா கடந்த காலத்தில் வீழ்ச்சி கண்ட கீழ் மட்டத்துக்கு — டாலர் - 32.15 ரூபா — வீழ்ச்சி கண்டது. இத்தகைய ஒரு நிலைமையிலேயே இலங்கையினுள்ளும் பண மதிப்பிறக்கத்துக்குச் செல்வது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் உள்ள ஒரே முதலாளித்துவ தீர்வு உலகை காட்டுமிராண்டித்தனத்துக்குள் மூழ்கடிப்பதேயாகும். இதற்கு தோள் கொடுக்க பொது ஜனங்களை பேரழிவுக்குள் தள்ளுவதே ஏகாதிபத்தியச் சார்பு ஆளும் வர்க்கங்களதும் அவர்களின் கைக்கூலிகளதும் அவசியமாகி உள்ளது.

பொதுஜன முன்னணி வாக்குறுதியளித்த ஜனநாயகத்தின் இலட்சணத்தினை தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் ஏற்கனவே கண்டுகொண்டுள்ளனர். பியகம தொழிலாளர்களுக்கு சூடு விழுந்தது. இரணவில மீனவர்களுக்கு சூடு விழுந்தது. கட்டுநாயக்க கொரியா — சிலோன் தொழிலாளர்கள் வேலைத்தலத்தில் உள்ளமர்ந்துகொண்டபோது பொலிசைக்கொண்டு துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. பெலவத்த சீனி கம்பனி தொழிலாளி ட்ராக்டரால் நெரித்துக் கொல்லப்பட்டார்.

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணய நெருக்கடி உலகப் பொருளாதார வீழ்ச்சியை எதிர்வு கூறுகின்றது.

ஜப்பானிய யென்னுடனும் ஜேர்மன் மார்க்குடனும் ஒப்பிடும் பொழுது அமெரிக்க டாலரை முன்னொரு போதும் இல்லாத தாழ்ந்த நிலைக்குத் தள்ளிய அனைத்துலக நாணயச் சந்தைகளைப் பீடித்துக் கொண்டுள்ள நெருக்கடி வெறுமனே கடந்து செல்லும் ஒரு நிதிச் சூறாவளி அல்ல. இது உலக முதலாளித்துவத்தின் அடிப்படையான ஸ்திரமின்மையையும் அராஜகத்தையும் காட்டிக் கொண்டுள்ளது.

டாலரின் மதிப்பை 88 யென்னுக்கும் 1.30 மார்க்குக்கும் தள்ளிய நான்கு நாட்கள் நீடித்த இவ்வீழ்ச்சி உலக நாணயச் சந்தைகளில் இடம் பெற்ற ஒரு தொடர்ச்சியான திடீர் தாக்குதல்களின் ஒரு பெரும் நாடகப் பாணியானது: மெக்சிக்கன் பெசோ நாணயத்தின் மற்றுமோர் வீழ்ச்சி, பழைய பிரித்தானிய வர்த்தக வங்கியான பாரிங்சின் சரிவு, ஸ்பானிய, போர்த்துக்கல், பிரேசில் நாணயங்களின் கட்டாய மதிப்பிறக்கம், மார்க்குக்கு, எதிராக இத்தாலிய லிறா, பிரான்சிய பிராங்க், பிரித்தானிய பவுண் மற்றும் ஐரோப்பிய நாணயங்கள் தலை மூழ்கல், ஷங்காய் முறி (Bond) சந்தையின் வீழ்ச்சிக்கு சமமான நிலை என்பன,

இந்த நாணய நெருக்கடி மிகவும் பாரதூரமான விளைவுகளை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. உலகச் சந்தையில் மதிப்பின் அடிப்படை அலகு இனி கிடையாது என்பதை இது குறிக்கின்றது, சகல நாணயங்களும் மிருகத்தனமாக சுற்றி சுழன்று கொண்டுள்ள ஒரு நிலையில் உலக வர்த்தகம், முதலீடு, நிதிக் கொடுக்கல் வாங்கல்களுக்கோ அல்லது பெரும் முதலாளித்துவ உறவுகளுக்கோ ஒரு உறுதியான அடிப்படை இல்லாது போயுள்ளது.

கடந்த 50 வருடங்களாக டாலர் கடன் அமைப்பினதும் அனைத்துலக நிதியினதும் அத்திவாரமாக விளங்கியது. இது உலக முதலாளித்துவத்தின் உள்ளே பொருளாதார வளர்ச்சியை தூக்கிவிட்டு வந்தது. இந்த அமைப்பு இன்று ஈடு செய்ய முடியாத விதத்தில் உடைந்து போயுள்ளது. மார்க்கோ அல்லது யென்னோ டாலரின் மையப் பாத்திரத்தினை ஆற்ற முடியாது.

சகல உருவிலான கடதாசிப் பெறுமானங்களும் அதிகரித்த முறையில் பிரச்சினைக்குள்ளாகி வருவதால் முதலாளித்துவத்தின் கீழ், நிஜ பெறுமானத்தின் களஞ்சியமான தங்கத்தினை நோக்கிய திருப்பம் ஏற்படுவது தவிர்க்க முடியாது இப்போக்கு உலகளாவிய பணச்சுருக்கத்தையும் வர்த்தக மந்தத்தினையும் கொணரும்.

உலக முதலாளித்துவம் பூகோள ரீதியான பேரழிவுகளையும், வங்குரோத்துக்களையும் பொருளாதார வீழ்ச்சிகளையும், அரசியல் கிளர்ச்சிகளையும் இறுதியில் ஏகாதிபத்திய யுத்தங்களையும் கொண்ட ஒரு புதிய காலப்பகுதியினுள் காலடி வைத்துள்ளது.

இந்நிகழ்வுகள் தொழிலாளர் வர்க்கத்தைப் பொறுத்த மட்டில் மிகவும் உடனடியானதும் தீர்க்கமானதுமான விளைவுகளைக் கொண்டுள்ளன. உலகம் பூராவும் உள்ள தொழிலாளர்களின் தொழில்களும், வாழ்க்கைத் தரங்களும் ஒரு அதிகரித்த இலாப வெறி பிடித்த ஆளும் வர்க்கத்தின் பணயக் கைதிகளாகி உள்ளன. இவை உழைப்புச் சுரண்டலை உக்கிரமாக்க மிக வன்முறையான நடவடிக்கைகளில் இறங்கும்.

## ஒரு வரலாற்றுப் போக்கு

நாணய நெருக்கடியை வரலாற்று ரீதியில் ஆய்வு செய்வதன் மட்டுமே இதை விளங்கிக் கொள்ள முடியும். இவை இரண்டு இடையுறவு கொண்ட போக்குகளின் பெறுபேறாகும்; சகல தேசியப் பொருளாதாரங்களையும் தீவிரமாக ஒன்றிணைக்கப் பட்டு வரும் உலக சந்தைக்கு அடிபணிய வைக்கவும், இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அமெரிக்க முதலாளித்துவம் வகித்த மேலாதிக்க அந்தஸ்தை இழந்ததுமாகும்.

1930பதுகளின் மாபெரும் பொருளாதார மந்தத்தினால் உருவான நாணய மதிப்பிறக்கம், வர்த்தக யுத்தங்களால் சிதறுண்டு போன அனைத்துலக வர்த்தகத்தையும் நிதி அமைப்பையும் மீளக் கட்டியெழுப்ப பெரும் முதலாளித்துவ வல்லரசுகள் 1944 பிரெட்டன் வூட்ஸ் உடன்படிக்கையினூடாக டாலரின் பாத்திரத்தினை அடிக்கல்லாக கொண்டன,

ஒரு அவுன்ஸ் தங்கம் 35 டாலர்களுக்கு மாற்றத் தக்கதாக செய்யப்பட்டது. அத்தோடு ஏனைய சகல நாணயங்களும் ஒரு குறிப்பிட்ட சமத்துவத்துடன் டாலருடன் பிணைக்கப்பட்டன. நாடுகளுக்கு இடையேயான அனைத்துலக வர்த்தகமும் முதலீடுகளும், கொடுப்பனவுகளும் டாலர் மூலமே நடைபெற்றன. நடைமுறையில் அது ஒரு உலக நாணயமாகவும் பெறுமானத்தின் உலக அலகாகவும் மாறியது.

பிரெட்டன் வூட்ஸ் அமைப்பானது இருபதாம் நூற்றாண்டில் முதலாளித்துவத்தின் மிகவும் அடிப்படையான முரண்பாட்டில் இருந்து தலையெடுக்கச் செய்யப்பட்ட ஒரு முயற்சியாகும். உலகச் சந்தையின் அபிவிருத்திக்கும் ஒவ்வொன்றும் அதனது சொந்த நாணயங்களையும் நிதி முறைகளையும் கொண்ட போட்டியிடும் தேசிய அரசுகளான உலகுக்கும் இடையேயான முரண்



கிளின்டன்

பாட்டில் இருந்து தலையெடுக்க செய்யப்பட்டது. இருப்பினும் டாலரை அடிப்படையாகக் கொண்ட நாணய முறை உலக வர்த்தகத்தினையும் உற்பத்தியையும் முதலீட்டையும் விஸ்தரித்து முன்னேற்றம் காணச் செய்த போதிலும் இது தவிர்க்க முடியாத விதத்தில் ஐரோப்பாவையும் யப்பானையும் புத்துயிர் பெறவைத்தது. இதன் மூலம் அமைப்பைத் தாங்கி நின்ற அமெரிக்காவின் பொருளாதார மேலாதிக்கத்துக்கு வேட்டு வைத்தது.

அமெரிக்காவுக்கும் அதன் போட்டியாளர்களுக்கும் இடையேயான பகைமை சென்பதி நிலுவை பற்றாக்குறை வளர்ச்சியில் வெளிப்பாடானது. இறுதியில் அது 1971ல நிக்சன் நிர்வாகத்தினை தாங்க முண்டு கொடுத்தலை இரத்துச் செய்யவும் நிலையான சென்மதி நிலுவை கட்டுப்பாட்டு வீதத்தினை முடிவுக்குக் கொணரவும் தள்ளியது.

பிரெட்டன் வூட்ஸ் அமைப்புக்கு மரணத்தைக் கொணர்ந்த முரண்பாடுகள் இன்னும் மோசமான வடிவத்துடன் உக்கிரம் அடைவது தொடர்ந்தது. அமெரிக்காவின் பொருளாதார வீழ்ச்சி தடையற்று முன்னேறியது. 1985ல் அமெரிக்கா உலகின் முன்னணி கடன் வழங்குவர் என்ற நிலையில இருந்து முன்னணி கடனாளியாக மாறியதோடு ஒரு புதிய திருப்பு முனை ஏற்பட்டது.

அதே சமயத்தில் கணனிமயமாக்கத்திலும் தொலைத் தொடர்புகளிலும் ஏற்பட்ட புரட்சிகரமான அபிவிருத்திகளும் ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களும், வங்கிகளும் கண்ட வளர்ச்சியும் உற்பத்தியும் நிதிச் சந்தைகளும் ஒரு பூகோள அடிப்படையில் ஒன்றிணைவதைச் சாத்தியமாக்கின. எவ்வாறெனினும் இந்த உலக அமைப்பு ஒரு மையமான ஒழுங்கமைப்பினையும் ஸ்திரப்பாட்டையும் உடையதான எதுவிதமான பொறி முறையையும் கொண்டிராது உள்ளது.

கடந்த ஒரு தசாப்தமாக இருந்து வரும் மோசமடைந்து வரும் நாணய நெருக்கடியின — 1987, 1988ல் வோல் ஸ்ரீட் சரிவு, 1990ல் டோக்கியோ பங்குச் சந்தை வீழ்ச்சி, 1992ல் ஐரோப்பிய நாணய அமைப்



கோல

பின் வெடிப்பில் இருந்து கடந்த டிசம்பரில் மெக்சிக்கன் பெசோ நாணயம் மதிப்பிறக்கம் செய்யப்பட்டதுடன் ஆரம்பமான சமீபத்திய கொந்தளிப்புக்கள் வரை — மூலமாக இதுவே இருந்து வந்துள்ளது.

## தேசியத்துக்கு எதிராக தேசியம்

இதன் ஒவ்வொரு கட்டத்திலும் பெரும் முதலாளித்துவ நாடுகளுக்கு இடையேயான மோதுதல்கள் பெரிதும் உக்கிரம் கண்டுள்ளன, பிரெட்டன் வூட்ஸ் அமைப்பின் முடிவின் பின்னர் பெரும் முதலாளித்துவ வல்லரசுகளிடையே ஒரு கூட்டு நடவடிக்கையை அபிவிருத்தி செய்ய நிறுவப்பட்ட ஜீ-7 உச்சி மகாநாடுகள் சடங்குகள் சம்பந்தப்பட்ட விவகாரமாக மாறி எதுவிதமான கண்டிப்பான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இந்த வல்லரசுகள் ஒவ்வொன்றும் — எல்லாவற்றுக்கும் மேலாக ஐக்கிய அமெரிக்கா அதனது வெளிநாட்டு போட்டியாளர்களுக்கு கேடான விதத்திலும் உலக முதலாளித்துவத்தின் முழு உறுதிப்பாட்டின் மீதான அதன் தாக்கம் பற்றி சட்டை செய்யாமலும் அவற்றின் சொந்த தேசிய வழிமுறைகளைக் கடைப்பிடிக்கின்றது.

இன்றைய நாணய குழப்பங்களுக்கு ஒரு கூட்டான ஏற்பாட்டினை ஒழுங்கு செய்ய எதுவிதமான கண்டிப்பான முயற்சியும் இல்லை. டாலரின் வீழ்ச்சியால் நாசமாக்கப்பட்ட தனது ஏற்றுமதி சந்தை சம்பந்தமாக ஒரு ஜீ-7 அவசர மகாநாட்டைக் கூட்டும்படி ஜப்பான் விடுத்த வேண்டுகோள் அதன் ஏகாதிபத்திய போட்டியாளர்களால் அடியோடு நிராகரிக்கப்பட்டுவிட்டது.

கிளின்டன் நிர்வாகமும் சமஷ்டி ரிசேர்வ் வங்கியும் (FRB) டாலரின் வீழ்ச்சியை தாமதிக்கும் அடையாள முயற்சிகளை மட்டுமே எடுத்தன. வோல் ஸ்ரீட் பேச்சாளர்கள் யப்பானுக்கும் ஜேர்மனிக்கும் எதிரான நாணய யுத்தத்துக்கு இட்டுச் செல்லும் கொள்கையையிட்டு அப்பட்டமாக திருப்தி தெரிவித்துள்ளனர். நிதி சம்பந்தப்பட்ட பத்திரிகைகள் எப்படி குறைந்த மட்டத்திலான டாலர் அமெரிக்க ஏற்றுமதியாளர்களை அதன் வெளிநாட்டு போட்டியாளர்களிடமிருந்து சந்தைகளைக் கைப்பற்றுவதை அனுமதித்தது என்பதை விளக்கும் நீண்ட விமர்சனங்களைப் பிரசுரித்திருந்தன. நியூயோர்க் டைம்ஸ் 'நெருக்கடி இல்லை' என்ற தலைப்பில் டாலரின் வீழ்ச்சி பற்றி ஆசிரியத் தலையங்கம் எழுதியிருந்தது.

ஜேர்மனியில் புண்ட்ஸ் வங்கி அயல் நாடுகளுக்கு ஏற்படக்கூடிய தாக்கத்தைப் பற்றியோ அல்லது கைசடந்து போன ஐரோப்பிய நாணயக் கூட்டுக்கான சாத்தியம் பற்றியோ கணக்கிலெடுக்காமல் ஒரு 'பலமான மார்க்' என்ற கொள்கையை கடைப்பிடிக்கின்றது, ஐரோப்பிய இணைவுக்கு எதிரான டோரி பாராளுமன்ற உறுப்பினர்களின் கிளர்ச்சியின் பின்னர் பிரித்தானிய பிரதமர் மேஜர் தமது அரசாங்கம் பதவியில் இருந்து வெளியேற்றப்படுவதை மயிரிழையில் தவிர்த்துக் கொண்டார். இதே வேளையில் பிரான்சில் அடுத்த மாதம் இடம் பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரங்களிலும் சகல பெரும் கட்சிகளதும் வேட்பாளர்களினதும் பொருளாதார தேசியவாதம் மேலாதிக்கம் செலுத்துகின்றது.

பெரும் ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையேயான பதட்ட நிலை இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் முன்னொருபோதும் கண்டிராதது. இவை வர்த்தகம், நாணய மோதுதல்களில இருந்து பொஸ்னியா, மத்திய கிழக்கு, முன்னைய சோவியத் யூனியனின் பிராந்தியங்கள் போன்ற அரசியல் பாதுகாப்பு விவகாரங்கள் வரை பரந்து செல்கின்றன. இதை அம்பலமாக்கும் விதத்தில் ஸ்பானிய மீன்பிடி கப்பல்களை அத்திலாந்திக் மீன்பிடி பிராந்தியத்தில் இருந்து விரட்டியடிக்க கனடா பீரங்கிப் படகுகளை பயன்படுத்துவதாக அறிவித்தது.

## அராஜகம்


இந்நெருக்கடியைத் தீர்க்கும் முயற்சியினை ஒருங்கிணைப்பதில் முக்கிய முதலாளித்துவ நாடுகள் தோல்வி கண்டுள்ளன. இது தலைமையினதும் கொள்கையினதும் வெறும் அசநிலைத் தோல்வி அன்று. அமெரிக்க முதலாளித்துவத்தின் பின்னடைவு உலகப் பொருளாதாரத்தின் பெரும் ஸ்திரப்பாட்டுக்கான காரணியை நீக்கிவிட்டதோடு முதலாளித்துவ உற்பத்தி முறையின் இயற்கையான அராஜகத்தை மீள வலியுறுத்தியும் உள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் யூனியனில் ஸ்டாலினிசத்துக்கு ஒரு மாற்றீடு இருந்ததா?

## பேராசிரியர் றொகோவினின் அமெரிக்க விரிவுரை சுற்றுலா



முன்னைய சோவியத் யூனியனின் தலைசிறந்த மார்க்சிச வரலாற்றாசிரியரான பேராசிரியர் வடிம் சகாரோவிச் றொகோவின் மார்ச் 7ம் திகதி அமெரிக்க மிச்சிக்கன் மாநிலப் பல்கலைக் கழகத்தில் ''சோவியத் யூனியனில் ஸ்டாலினிசத்துக்கு ஒரு மாற்றீடு இருந்ததா?'' என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்தினார். வழக்கத்துக்கு மாறாக பேராசிரியர் றொகோவினின் விரிவுரைக்கு வந்த 220 விரிவுரையாளர்கள் மாணவர்களால் மண்டபம் நிரம்பி வழிந்தது.

57 வயதான பேராசிரியர் தத்துவ விஞ்ஞானத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றதோடு மாஸ்கோவில் உள்ள ருஷ்ய சமூகவியல் விஞ்ஞான கழகத்தின் ஒரு முன்னணி ஆராய்ச்சியாளர். ஸ்டாலினிச அதிகாரத்துவ ஆட்சி பற்றிய ஆறு தொகுதி வரலாற்றுநூலைஎழுத ஆரம்பித்துள்ள றொகோவின் ஏற்கனவே இதில் மூன்று தொகுதிகளை எழுதி முடித்துவிட்டார். அமெரிக்க மாணவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் சோவியத் யூனியனின் வரலாற்றினை தமது விரிவுரையில் தெளிவு படுத்திய றொகோவின் ''சோசலிசம் செத்துவிட்டது'' என்ற இன்றைய நச்சுப் பிரச்சார இயக்கத்துக்குப் பலத்த அடிகொடுத்துள்ளார். அத்தோடு மேற்கத்தைய நாடுகளில் நடைமுறையில் உள்ள உத்தியோகபூர்வமான சோவியத் இயலுக்கும் இவ்விரிவுரைகள் தலையடி கொடுத்துள்ளன. இங்கு நாம் அவரது விரிவுரையின் தொடர்ச்சியையும் இடம்பெற்ற கலந்துரையாடலையும் தருகின்றோம்.

(கடந்த இதழின் தொடர்ச்சி)

### ட்றொட்ஸ்கியின் இடதுசாரி எதிர்ப்பு எதிர் ஸ்டாலினிசம்

இனி நான் எனது ஆய்வின் போது ஏற்கனவே வந்த சில முடிவுகளைத் தொட்டுச் செல்ல விரும்புகின்றேன். 1920களின் நடுப்பகுதியில் போல்ஷிவிக் கட்சி ஏற்கனவே இரண்டு சரிப்படுத்த முடியாத எதிரிடை போக்குக்களாக — ஸ்டாலினிசமும் இடதுசாரி எதிர்ப்பும் என அல்லது அவர்கள் தம்மை அழைத்துக் கொண்டது போல் போல்ஷிவிக் — லெனினிஸ்டுகள் — இது ட்றொட்ஸ்கியினால் தலைமைதாங்கப்பட்டது என அழைக்கப்பட்டது.

இவ்விரு எதிரிடையான போக்குக்களதும் சிந்தனா சக்திகள் அவை கொண்டிருந்த சட சாதனங்களுக்கு எதிரிடையான விகிதாசாரமாக விளங்கின. கட்சியின உள்ளே மிகவும் பலம்வாய்ந்த எதிர்ப்புச் சக்தியாக விளங்கிய இடதுசாரி எதிர்ப்பு ஸ்டாலினிச கொள்கையைப் பற்றிய சகல திறத்திலுமான விமர்சனங்களை வெளியிட்டது. இடதுசாரி எதிர்ப்பு — கட்டாய கூட்டுப் பண்ணையாக்கத்தையும், வெகுஜனங்களை குறைந்த வாழ்க்கைத் தரத்துக்கு இட்டுச் சென்ற கட்டாய கைத்தொழில்மயமாக்கத்தையும், புத்திஜீவி சுதந்திர அடக்குமுறையையும், என்றுமில்லாத அரசியல் ஆட்சியின் ஒடுக்குமுறைகளையும், மத்தியமய திட்டமிடலின் அதிகாரத்துவத் திரிப்புக்களையும் விமர்சனம் செய்தது. இவற்றில் பலவும் சமூக சமத்துவமின்மையின் வளர்ச்சியை கண்டனம் செய்தன. ஒவ்வொரு கட்டத்திலும் இடதுசாரி எதிர்ப்பு ஒரு சாதகமான வேலைத் திட்டத்தையும் ஸ்டாலினிசத்துக்கு ஒரு பதிலீட்டையும் அபிவிருத்தி செய்தது.

நான் இது வளர்ச்சி கண்ட விதத்தில் வருடாவருடம் இடம்பெற்ற அடிப்படை மாற்றங்களைப் பற்றியும் இந்த வேலைத்திட்டத்தின் அடிப்படை அம்சங்கள் பற்றியும் தொட்டுச் செல்ல முடியாது ஆனால் ட்றொட்ஸ்கி சோவியத் யூனியனுள் இடதுசாரி எதிர்ப்பு ஏன் இவ்வளவு கடுமையான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளது என்பதை விளக்க முன்வைத்த வார்த்தைகளை நான் அறிமுகம் செய்ய விரும்புகின்றேன். அவர் கூறினார்: நாம் துன்புறுத்தல்களுக்கு முகம் கொடுத்துள்ளதற்கு காரணம் ஸ்டாலினிச அதிகாரத்துவம் சாதாரணமாக அனுமதிக்க முடியாத சுதந்திரத்தினையும் சமத்துவத்தையும் மக்களுக்கு வேண்டி நிற்பதேயாகும்.

அக்டோபர் புரட்சியின் பின்னர் அபிவிருத்தி கண்ட அடிப்படை முரண்பாடுகளை பின்வருமாறு தொகுத்துக் கூற முடியும்: அக்டோபர் புரட்சி முன்னைய ஆளும் கும்பலை வெளியேற்றி அவர்களின் வசதிவாய்ப்புக்களையும் ஒழித்துக்கட்டியது. ஆனால் சமூக சமத்துவம் என்ற பதாகையின் கீழ் இடம்பெற்ற அக்டோபர் புரட்சியின் பின்னர் ஆளும் பிரமுகர்களிடையே புதிய வசதி வாய்ப்புகள் வளர்ச்சி காணத் தொடங்கியது. இடதுசாரி எதிர்ப்பு ஸ்டாலினிச அரசியலின் இந்த உள்ளார்ந்த அம்சத்துக்கு எதிராக மிகவும் உறுதியாக பேசியது. இடதுசாரி எதிர்ப்பு பெரிதளவிலான சமூக சமத்துவத்தை வேண்டி நிற்பதனாலேயே அதனைத் துன்புறுத்துவதாக அதிகாரத்துவத்தினால் வெளிப்படையாக கூறமுடியவில்லை. இருப்பினும் இடதுசாரி எதிர்ப்புக்கு எதிரான தொடர்ச்சியான அடக்குமுறையின நெருக்கமும் இறுதியில் விநோதமான பொய்மைப் படுத்தல்களும், பொய் வழக்குகளும் வளர்ச்சி கண்டன.

இடதுசாரி எதிர்ப்பு அது உண்மையில் ஈடுபட்டுள்ளது எதற்காக என்பதன் பேரில் குற்றம்சாட்டப்படவில்லை. மாறாக வெளிநாட்டு உளவுச் சேவைகளதும், கெஸ்டபோவினதும் (GESTAPO) ஏஜண்டுகளாக உளவு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது.

### அனைத்துலகவாதம் எதிர் தேசிய சோசலிசம்

இடதுசாரி எதிர்ப்பு துன்புறுத்தப்பட்டமையின் அனைத்துலக அம்சம் முக்கியத்துவம் குறைந்ததல்ல. 1930 பதுகளில் ஸ்டாலினிச ஆட்சி உலகப் புரட்சியைக் கைவிட்டுவிட்டு உலக வரலாற்றின் மாபெரும் பரந்த அரசியல் தோற்றப்பாடாக விளங்கிய முழு கம்யூனிஸ்ட் இயக்கத்தினையும் ஸ்டாலின் புரிந்து கொண்டதன்படி சோவியத் அரசின் உடனடித் தேவைகளுக்கு கீழ்ப்படியச் செய்ய ஆரம்பித்தது. இடதுசாரி எதிர்ப்பு இதற்கு எதிராகப் பலமாக ஆட்சேபம் தெரிவித்தது.

ஒரு அனுமான பண்பினைக் கொண்ட எனது ஆய்வின் ஒரு மேலாய முடிவு இடதுசாரி எதிர்ப்புக்கு எதிராக இழைக்கப்பட்ட உக்கிரமான துன்புறுத்தல்கள், சித்திரவதைகளுக்கு இடையேயும் அதன் செல்வாக்கில் தொடர்ச்சியான வளர்ச்சி காணப்பட்டது. எதிர்க்கட்சியின் அங்கத்தவர்களின் அதிகரிப்பு சோவியத் யூனியனின் உள்ளே மட்டுமன்றி வெளிநாட்டிலும் ஏற்பட்டது.

இந்த எதிர்ப்பு சக்திகளின் பெருக்கத்தின் ஒரு அறிகுறியாக 1930ல் நிறுவப்பட்ட ஒரு 'புளொக்' (Bloc) விளங்கியது. இந்த புளொக் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் பல... த்தில் இருந்து இடம்பெற்ற முன்கூட்டிய தாக்குதலின் ஒரு பலிகடாவாகியது. அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இங்ஙனம் கைதுசெய்யப்பட்டவர்களில் எவரும் 1932 புளொக்கின் இருப்பை வெளிக்காட்டாதது அக்கறைக்குரியது. 1934ல் கிரோவின் படுகொலையின் பின்னர் மட்டுமே ஸ்டாலின் இதைப் பற்றி அறிந்தார்.

அடுத்த முடிவு — இன்னமும் முழுமையாக ஊர்ஜிதம் செய்யப்படாத போதிலும் ஒரு நல்ல நடைமுறை அனுமானம் என நான் நினைக்கின்றேன். —1937ன் தொடக்கத்தில் — ஸ்டாலினிச பயங்கரத்தின் உச்சக்கட்டத்தில் ஸ்டாலினுக்கு எதிராக நெறிப்படுத்தப்பட்ட இராணுவ, அரசியல் சதி ஒன்று தோன்றியது. ஆனால் ஸ்டாலின இந்த எதிர்ப்புக்கு மேலாக தோன்றி அவர்களை தடுக்கவும் அவர்கள் சதியை அமுல் செய்வதற்கு முன்னதாக அவர்களை ஒழித்துக் கட்டவும் முடிந்தது.

இந்த விதத்தில் 1937—38 ஒழித்துக்கட்டல்கள் ஸ்டாலினின் புறத்தில் இருந்து வெடித்த ஒரு மூளைக் குழப்பத்தால் உருவான ஒரு காட்டுமிராண்டிப் பாய்ச்சல் அன்று. எதிர்ப்புக்கு எதிராக ஸ்டாலின் போரிடக் கொண்டிருந்த சாத்தியமான ஒரே சாதனம் இவையே. இது எதிர்ப்புக் கருத்துக்களைக் கொண்டிருந்தவர்களை துடைத்துக் கட்ட மட்டுமன்றி போல்ஷிவிசத்தின் உயிர்த் துடிப்புக்கு எதிராகவே நெறிப்படுத்தவும் பட்டது. மாபெரும் ஒழித்துக் கட்டல்கள் இலட்சோப இலட்சம் சோவியத் மக்களை மட்டுமன்றி அப்போது சோவியத் யூனியனில் வசித்து வந்த பல்லாயிரக்கணக்கான வெளிநாட்டுக் கம்யூனிஸ்டுகளையும் ஒழித்துக்கட்டியது. இது முழு உலக கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கும் எதிரான ஒரு மோசமான அடியாக இருந்ததால் அதனால் இன்று வரை காலூன்றி நிற்பது ஒருபோதும் சாத்தியமாகவில்லை.

ஒவ்வொரு கம்யூனிஸ்ட் கட்சியிலும் இந்த அடக்குமுறைகளில் விரும்பிப் பங்கெடுக்க ஆட்கள் தெரிவுசெய்யப்பட்டனர். யுத்தத்துக்கு பின்னைய காலப்பகுதியில் ஸ்டாலினிசத்தை எதிர்த்துப் போராடியவர்களாக இரண்டு உதாரணங்களை தருவது வழக்கமாக உள்ளது. முதலாவது இம்ரே நாகி. ஹங்கேரி பிரதமராக விளங்கிய இவர் ஸ்டாலினிசத்துக்கு எதிரான 1956 கிளர்ச்சியில் பங்கு கொண்டார், பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டார். சமீபத்தில் நாகி பல தசாப்தங்களாக N.K.V.D க்காகவும் N.K,V.D யுடனும் தொழிற்பட்டதாகக் காட்டும் பத்திரங்கள் ஹங்கேரியிலும் சோவியத் யூனியனிலும் வெளியிடப்பட்டுள்ளன. அவர் பல நூற்றுக்கணக்கான ஹங்கேரியர்கள், பல்கேரியர்கள், ஜேர்மனியர்கள் மற்றும் கம்யூனிஸ்டுகளை கண்டனம் செய்யும் இரகசியப் பத்திரங்களை எழுதியுள்ளார்.

மற்றைய உதாரணமாக டிட்டோ பொதுவாகக் காட்டப்படுகின்றார். இங்கு கூடியுள்ளவர்களுக்கு டிட்டோ யார் என்பதை நான் விளக்க வேண்டியதில்லை. அவர் NKvDயின் நேரடி ஏஜன்டாக இருந்தார் என்பதற்கு சாட்சியங்கள் இல்லை. ஆனால் அவரின் ஆதரவாளர்களுடன் பின்னர் அவர் யூகோஸலாவிய ஆட்சியில் முற்றுப் பெற்றார். அவர் தனது சொந்த கட்சிக்கு எதிரான ஒரு ஈவிரக்கமற்ற ஒழித்துக்கட்டல்களை நடாத்தியதோடு பெருவாரியான ஸ்டாலினிச ஆதரவு பண்னிப் புக்கோரல்களையும் எழுதினார். பின்வரும் ஆர்வத்தைத் தூண்டும் அறிக்கை டிட்டோவுக்குச் சொந்தமானது; ''சிலர் நான் ஒரு ட்றொட்ஸ்கிஸ்ட் அல்ல என்கிறார்கள். ஆனால் நான் ஒரு ஸ்டாலினிஸ்டும் அல்ல. யார் அங்ஙனம் சொல்கிறார்களோ அவர் ஒரு ட்றொட்ஸ்கிஸ்ட் என்பதில் சந்தேகமில்லை.''

இறுதியாக நான் ஒரு இறுதி முடிவினை சமர்ப்பிக்க விரும்புகின்றேன்; சோசலிசம் இரண்டு தடவை காட்டிக் கொடுக்கப்பட்டது. முதற்தடவையாக ஸ்டாலினிச தலைமையினாலும் இரண்டாவது தடவையாக மாஜி, சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் (CPSU) இன்றைய தலைவர்களாலும். அது கொர்பச்சேவாக, யெல்ட்சினாக யகோவ்யேவாக அல்லது செவனாட்சேயாக இருக்கலாம். சோசலிசக் கருத்துக்கள் எமது நாட்டினுள்ளும் அதன் எல்லைகளுக்கு வெளியேயும் பல இலட்சோப லட்சம் மக்களின் கண்களில் கவர்ச்சி அற்ற ஒன்றாகியது.

அடிக்கடி எமது நாட்டினுள்ளும் அத்தோடு உங்கள் நாட்டினுள்ளும் சொல்லிக்கொள்ளப்பட்டவைக்கு முரணான முறையில் இது கம்யூனிசம் உயிர்நீத்துவிட்டதைக் குறிக்கவில்லை. எண்ணற்ற விடயங்களை நாம் அவதானிக்க முடியும். அவை வெகு விரைவில் பரந்த தொழிலாளர்களிடையே ஒரு ஆழமான தாக்கத்தினை ஏற்படுத்துவது நிச்சயம். இந்த மண்ணில் சனத்தொகையின் பரந்த மக்களிடையே சோசலிசக் கருத்துக்கள் புது வளர்ச்சி பெறுவது தவிர்க்க முடியாதது. சோசலிசத்தின் மறுபிறப்பின் இந்த வெற்றியானது பெருமளவுக்கு இன்றைய கம்யூனிஸ்டுகளும் எதிர்கால கம்யூனிஸ்டுகளும் ஏகதலைவனாட்சியின் வரலாற்றை புரிந்து கொள்ளவும் மீளாய்வு செய்யவும் கூடியவராயும், கடந்த சோசலிஸ்ட் இயக்கத்தின் வெற்றியை மட்டுமன்றி தோல்வியை மீளாய்வு செய்யக் கூடியவராயும், 1920பதுகளதும் 1930பதுகளதும் உள்ளார்ந்த கட்சிப் போராட்டத்தின் படிப்பினைகளை கற்கக்கூடியவராய் எந்தளவுக்கு உள்ளனரோ அந்தளவுக்கே தங்கியிருக்கும்.

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் யூனியனில் ஸ்டாலினிசத்துக்கு...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

## பேராசிரியர் றொகோவினின் விரிவுரையைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடல்

**கேள்வி:** பாசிசத்துக்குப் பதிலாக சோசலிசம் மறுபிறப்புக் காணும் என்பதில் நீங்கள் உறுதியாக இருக்க காரணம் என்ன? நீங்கள் வெற்றி பெறுவீர்கள் என நான் எதிர்பார்க்கின்றேன். ஆனால் நீங்கள் அவ்வாறு சிந்திக்க காரணம் என்ன என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

**றொகோவின்:** நாம் இரண்டு முற்றிலும் வேறுபட்ட எண்ணக் கூட்டுப் பற்றி பேசுகின்றோம். அவை இந்த இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய இரு பெரும் அரசியல் போக்குக்களின் அடிப்படையாக உள்ளன. ஒரு இனத்தின் அல்லது ஒரு தேசியத்தின் மேல் இன்னொன்று மேலாதிக்கம் செலுத்தும் கருத்தினை பாசிசம் இதயத்தில் கொண்டுள்ளது. சோசலிசத்தின் நிஜமான எண்ணக்கருவின் இதயத்தில் சமூக சமத்துவம், சமூக நீதி, தேசியங்களின் சமத்துவம், அனைத்துலகவாதம், கூட்டுப் பண்ணை போன்ற உயர்ந்த கருத்துக்கள் உள்ளன. முதலாவது சிந்தனா முறையான பாசிசம் மண்டி மூலங்களையும் (Lumpen Elements) பேதைகளையும் ஈர்க்கும். இரண்டாவது உலகம் பூராவுமுள்ள மனிதாபிமானம் கொண்ட மக்களை ஈர்ப்பது தவிர்க்க முடியாதது.

**கேள்வி:** நீங்கள் பல பெயர்களைக் குறிப்பிட்டீர்கள். ஆனால் நிக்கொலாய் சொன்ட்றாரிவ் உங்களுக்கு 1920பதுகளின் கடைப்பகுதி 1930பதுகளின் ஆரம்பம் சம்பந்தமாக எதையாவது குறிக்கின்றதா? அவர் எங்கே பொருந்தி வருகின்றார்?

**றொகோவின்:** நீங்கள் மனதில் புகழ்பெற்ற ருஷ்ய விவசாய நிபுணரையும் பொருளியலாளரையும் கொண்டுள்ளீர்கள். உண்மையில் இது எனது விரிவுரையின் வரப்பினுள் வரவில்லை. ஆனால் அவர் ஒரு தலைசிறந்த கல்விமான்களில் ஒருவர் எனவும் சமூக புரட்சிக் கட்சிக்கு (SRP) நெருக்கமானவராய் விளங்கினார் எனவும் என்னால் கூற முடியும். 1920பதுகளில் அவர் உண்மையில் போல்ஷிவிக்குகளுடன் சேர்ந்து உழைத்தார். கட்சி சார்பற்ற கல்விமான்கள், புத்திஜீவிகள் மேல் கொடூரமான தாக்குதல் இடம்பெற்ற 1930 துகளின் தொடக்கத்தில் அவரும் கூட ஒடுக்குமுறைக்கு முகம் கொடுத்தார்.

ஜீ பீ யூ. அலுவலர்களுக்குள்ள — அன்றைய இரகசியப் பொலிஸ் அவர்கள் கற்பனை செய்து கொண்டதும் அடியோடு பொய்யான கட்சியுமாக — இருப்பதாகக் கூறிக்கொண்ட ஒரு அரசியற் கட்சி — தொழிலாளர் — விவசாயிகள் கட்சி எனப்படுவது உள்ளதாகக் கூறிக் கொண்டனர். கைத்தொழில் கட்சி எனப்பட்டதற்கு எதிராக அல்லது மென்ஷிவிக்குகளுக்கு எதிராக இடம் பெற்ற இரண்டு பொய் வழக்குகளைத் தவிர இந்த கட்சிகள் எனப்படுபவற்றுக்கு எதிராக பகிரங்க பொய் வழக்குகள் நடைபெறவில்லை. கொன்டரேடிவ் — அவரின் பல சகாக்களைப் போலவே 1937ல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**கேள்வி;** ஸ்டாலினுக்கும் ட்றொட்ஸ்கிக்கும் இடையேயான முக்கிய எதிர்ப்பு சிவில் யுத்தத்துக்கு பிந்திய காலப் பகுதியில் என்ன செய்வது தொடர்பாக முகம் கொடுத்ததே என்பதே பொதுக் கருத்தாகும். ருஷ்யப் பொருளாதாரம் நாசமாக்கப்பட்டது. 1919ல் முற்றுப்பெற்ற அனைத்துலக புரட்சிகர நிலைமை தோல்வி கண்டது. ஸ்டாலின் ஒரு நாட்டில் சோசலிசத்தை கட்டி எழுப்புவது இப்போது அவசியம் என்ற நிலைப்பாட்டுடன் தோன்றினார். அச்சமயத்தில் இடதுசாரி எதிர்ப்பின் நிலைப்பாடு என்னவாக இருந்தது என நான் ஆச்சரியப்படுகின்றேன்?

**றொகோவின்:** எனது நிலைப்பாட்டின்படி உலகப் புரட்சி கருத்துக்கள் 1919ல் தோல்வி காணவில்லை. முதலாவது பிரமாண்டமான புரட்சிகர எழுச்சி அலைகள் ஜேர்மனியில் புரட்சிகர நெருக்கடி ஏற்பட்டிருந்த போது 1923லேயே பின்வாங்கத் தொடங்கியது. பல நாடுகள் புரட்சிகரப் போராட்டங்களதும் உள்நாட்டுப் போர்களதும் காலப் பகுதியினுள் நுழைந்தன. உதாரணமாக 1926ல் இங்கிலாந்தில் பொது வேலைநிறுத்தம் ஏற்பட்டது, 1925 — 27ல் சீனாவில் புரட்சி ஏற்பட்டது. அதன் பின்னர் 20 வருடகால உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் இறுதியாக சீனப் புரட்சியில் உச்சக் கட்டத்தை அடைந்தது. 1930பதுகளின் ஆரம்பத்தில் ஜேர்மனியில் ஒரு புரட்சிகர நெருக்கடி உருவானது. 1936ல பிரான்சில் புரட்சிகர நிகழ்வுகள் ஏற்பட்டன. அதைத் தொடர்ந்து ஸ்பானியாவில் உள்நாட்டு யுத்தம் ஏற்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் முழு ஆசியாவிலும் கியூபா போன்ற நாடுகளிலும் தேசிய விடுதலைப் போராட்டங்களும் புரட்சிகரப் போராட்டங்களும் உருவாகின.

உண்மையில் நான் சற்று முன்நோக்கி செல்கின்றேன். 1920பதுகள் 1930பதுகள் பூராவும் இடதுசாரி எதிர்ப் புரட்சிகர நெருக்கடி நிலவிய நாடுகள் ஒவ்வொன்றிலும் புரட்சிகரச் சக்திகளை பலப்படுத்தவும் விஸ்தரிக்கவும் போராடியது. ஸ்டாலினிஸ்ட் தலைவர்களும் ஸ்டாலினிச கோமின்டானும் (Comintern) புரட்சியை புறநிலையாகத் தடுக்க அல்லது இந்நாடுகளில் புரட்சிகர நிலைமைகள் தோல்வியில் முடிந்[illegible] உறுதிசெய்ய தம்மால் முடிந்த அனைத்தையும் செய்தன. இதனை நிரூபிக்க இந்த ஒவ்வொரு புரட்சிகர நிகழ்வுகளையும் ஸ்தூலமாக ஆய்வு செய்ய வேண்டியிருக்கும். அது இவ்விரிவுரையின் எல்லையைத் தாண்டிச் செல்கின்றது.

**கேள்வி:** ருஷ்யாவில் அக்டோபர் புரட்சியின் பாத்திரத்தினை நீங்கள் எங்ஙனம் மதிப்பீடு செய்கின்றீர்கள். அது வரலாற்று ரீதியில் தவிர்க்க முடியாததாய் இருந்ததா?

**றொகோவின்:** எனது கருத்துப்படி ருஷ்யாவில் அக்டோபர் புரட்சி இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் வரலாற்று நிகழ்வு இது சற்று முரண்பாடுகளைக் கொண்ட உண்மையாய் தொனிக்கலாம். ஆனால் அக்டோபர் புரட்சி சோவியத் யூனியனைக் காட்டிலும் ஏனைய நாடுகளின் தொழிலாளர்களுக்கு மாபெரும் தேட்டங்களைக் கொணர்ந்ததாகத் தெரிகின்றது. சோசலிசப் புரட்சி ஒரு நாட்டிலும் — அதுவும் ஒரு பெரும் நாட்டிலும் ஏற்பட்டதோடு ஏனைய நாடுகளில் சோசலிச எழுச்சியின் அலைகள் பெருக்கெடுத்தன என்ற உண்மையையும் எதிர்கொண்ட அந்நாடுகளின் ஆளும் வட்டாரங்கள் தொழிலாளர் வர்க்கத்துக்கு மிகவும் கணிசமான சமூகச் சலுகைகளை வழங்குவதில் இறங்கும்படி தள்ளப்பட்டன.

இது சம்பந்தமாக நான் இங்கு மிகவும் அதிகாரபூர்வமான ஒரு புள்ளியின் அபிப்பிராயத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். பிராங்கிளின் ரூஸ்வெல்டின் உதவியாளரான ஹரி கொப்கின்ஸ் தனது நினைவுக் குறிப்புக்களில் சேர்ச்சில் டெஹ்ரான் மகாநாட்டில் ஏழைகளின் நிலைமைகளை அபிவிருத்தி செய்யப் பிரகடனம் செய்யும் விதத்தில் நல்வாழ்த்துக் கூறி கரங்களை உயர்த்தினார் எனக் கூறுகின்றார். ரூஸ்வெல்ட் அமெரிக்காவில் ஒரு சோசலிஸ்ட் புரட்சியைத் தடைசெய்தார்.

அக்டோபர் புரட்சி இல்லாமல் அத்தகைய சலுகைகள் கிடைத்திருக்க மாட்டா என நான் கருதுகின்றேன். அமெரிக்காவில் New Deal இடம் பெற்றிருக்க மாட்டாது.

**கேள்வி:** நீங்கள் மிகைல் கொர்பச்சேவ் சோசலிசத்தை காட்டிக் கொடுத்தவர் எனக் கூறும் போது நீங்கள் கருதுவது என்ன?

**றொகோவின்:** அவரது எழுத்துககளில் நாம் அவற்றை திரும்ப வாசிப்பின் — கொர்பச்சேவ் சோசலிசத்தைப் பற்றி பல பொது விடயங்களைக் கூறியுள்ளதைக் காணலாம். பெரெஸ்ரொய்க்காவின் முக்கிய பணி அதிக சோசலிசம் என கூறியுள்ளதையும் காணலாம். கொர்பச்சேவின் கீழ் உண்மையில் இடம்பெற்றவை [illegible] — அவர் உண்மையில் அமுல் செய்த கொள்கைகள் என்னவெனப் பார்ப்பின் அவை மேலும் மேலும் முதலாளித்துவச் சார்பானவையாய் விளங்கின.

கொர்பச்சேவின் கீழ் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பாதை அமெரிக்கன் ''முரட்டு மேற்கு''டன் ஒப்புவமை பெற்று 'முரட்டு முதலாளித்துவம்' என அழைக்கப்பட்டதன்படி தயாரிக்கப்பட்டது.

**கேள்வி;** ருஷ்யா தன்னைப் பாதுகாக்கவும் பாசிச ஜேர்மனியை தோற்கடிக்கவும் ஸ்டாலின் போன்ற ஒரு பலமானதும் மையமானதுமான புள்ளி ருஷ்யாவுக்கு அவசியமானதாக இருந்தது என நீங்கள் கருதுகின்றீர்களா?

**றொகோவின்:** இல்லை. சோவியத் மக்கள் யுத்தத்துக்கு முன்னர் மட்டுமன்றி யுத்தத்தின் போதும் ஸ்டாலினால் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைகளுக்கு எதிராக தனது சொந்தச் சக்திகளின் சிறப்புவாய்ந்த பெருமுயற்சி மூலம் பாசிச ஜேர்மனியை வெற்றி கொண்டனர்.

**கேள்வி:** ஜேர்மனியால் தொடுக்கப்பட்ட ஆக்கிரமிப்பு ஒரு தடுப்பு தாக்குதலாக விளங்கியது என நீங்கள் நினைக்கின்றீர்களா?

**றொகோவின்:** இக்கருத்து எதிர்பாராதவிதமாக எமது நாட்டில் உள்ள ஒரு நிஜ துரோகியினால் எழுதப்பட்ட ஒரு நூலின் பக்கங்களில் இருந்து வெளிப்பட்டது. இது முற்றிலும் கற்பனையானது. இதை எந்தவிதத்திலும் ஊர்ஜிதம் செய்யும் உண்மைகள் கிடையாது. உண்மையில் ஜேர்மனி சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத்துக்கு தயார் செய்து வந்தது. செஞ்சேனையின் தளபதிகள் இதனை நன்றாகப் புரிந்து கொண்டிருந்தனர். அவர்கள் ஜேர்மனிக்கு எதிரான யுத்தத்துக்கு தயார் செய்து வந்தனர். ஆனால் நீங்கள் இந்த மனிதனின் — சுவோரோவின் — அதுதான் அவரின் புனைபெயர் அப்பெயரில் அவர் பல நூல்களை எழுதியுள்ளார் — கூற்றை நம்பினால், 1941 ஜூலையில் சோவியத் யூனியன் ஜேர்மனியைத் தாக்கத் தயார் செய்து வந்தது என்பதை நம்பினால் — இவை உண்மையாக இருந்தால் 1941ன் முதல் 6 மாதங்களில் 4 மில்லியன் ஆட்கள் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர் என்ற உண்மையை நீங்கள் விளக்க முடியாது. வேறு வார்த்தைகளில் சொன்னால் சோவியத் யூனியனின் படைகள் முற்றிலும் தயார் அற்ற நிலையில் இருந்தன.

**கேள்வி:** 1927ல் கம்யூனிஸ்ட் கட்சியின் உள்ளேயான இடதுசாரி எதிர்ப்பின் எதிர்ப்பு ஸ்டாலின் தனது கொள்கையை சீனாவில் பலப்படுத்தவும் எதிர்க்கட்சியை அங்கு நசுக்கவும் உதவுவதற்கான உந்து சக்தியாக இருந்ததா?

**றொகோவின்:** சீனாவிலான ஸ்டாலினிஸ்ட் கொள்கை குறைந்தபட்சம் எந்தவொரு நேர் வழியிலும் இடதுசாரி எதிர்ப்பினை நசுக்க நெறிப்படுத்தப்பட்டது என நான் நினைக்கவில்லை. ஸ்டாலின் குவாமின்டாங்கினுள் நுழையவும் சியாங் – கை – சேக்குடன் ஐக்கியப்படவும் சீன கம்யூனிஸ்ட் கட்சியை பொருத்தமானதை கடைப்பிடிக்கும்படி நெருக்கும் கொள்கையை கடைப்பிடித்தான். குவாமின்டாங் கோமின்டானினுள் (Comintern) நுழைந்தது.

இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஸ்டாலினிஸ்ட் குழுவுக்கும் இடதுசாரி எதிர்ப்புக்கும் இடையேயான வேறுபாடு என்ன? இடதுசாரி எதிர்ப்பு, குவாமின்டாங்கும் சியாங்கை சேக்கும் ஒரு முதலாளித்துவ அரசியல் கட்சியாகவும் தலைமையாகவும் விளங்கியதோடு அவை சீனப் புரட்சியை காட்டிக்கொடுப்பது தவிர்க்க முடியாதது எனவும் நம்பியது. உண்மையில் இடதுசாரி எதிர்ப்பின் இந்த எச்சரிக்கை சீனாவில் இதைத் தொடர்ந்து இடம்பெற்ற சம்பவங்களால் முழுமனே ஊர்ஜிதம் செய்யப்பட்டது. சீனத் தொழிலாளர் வர்க்கம் ஒரு தொகை இரத்தம் தோய்ந்த அடக்குமுறைகளுக்கு உள்ளாகியது.

**கேள்வி:** இருப்பினும் ருஷ்யாவில் புரட்சி அவசியமானதாயும் அது ருஷ்யத் தொழிலாளர் வர்க்கத்துக்கு சாதகமான பெறுபேறுகளையும் கொணர்ந்தது என நீங்கள் கூறுவீர்களா?

**றொகோவின்:** ஸ்டாலினிசத்தின் பயங்கரமான குற்றங்களுக்கிடையேயும் அக்டோபர் புரட்சி இல்லாமல் ருஷ்யா — பின்னர் சோவியத் யூனியனாக மாறியது — ஒரு போதுமே ஒரு மேலாதிக்க வல்லரசாக மாறியிராது எனவும், உலகளாவிய ரீதியில் ஒரு பலம் வாய்ந்த நாடாக வந்திராது எனவும் நான் நம்புகின்றேன்.

**கேள்வி:** நீங்கள் தொட்டுச் சென்றவற்றிலும் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினுள் கோமின்டான் தலைமை உள்ளீர்க்கப்பட்டமை பற்றி நீங்கள் சிறிது வெளிச்சம் பாய்ச்ச முடியுமா? நான் குறிப்பாக இத்தாலிய ரொக்லியட்டியை நினைக்கின்றேன். மாபெரும் ஒழித்துக்கட்டல்களில் அவர்கள் என்ன பாத்திரம் வகிக்க வேண்டி இருந்தது.

**றொகோவின்:** அகநிலையாகப பேசின் ரொக்லியட்டி உண்மையிலேயே ஒரு நேர்மையான மனிதன் என நான் நினைக்கிறேன். ஆனால் அவர் முழு ஸ்டாலினிச குற்ற அமைப்பினுள் பெரிதும் இழுபட்டுப் போனார். உதாரணமாக அவர் ஸ்பெயினில் விரிந்து சென்ற உள்நாட்டு யுத்தத்தில் ஒரு மிகவும் இழிவான பாத்திரத்தினை வகித்தார், அவர் கோமின்டானின் (Comintern) முக்கிய பிரதிநிதியாக அங்கு அனுப்பப்பட்டதோடு ஸ்பெயினில் கம்யூனிஸ்டுகளையும் மற்றும் ஸ்டாலினிச எதிர்ப்பு சோசலிஸ்டுகளையும் மற்றும் மார்க்சிஸ்டுகளையும் ஒழித்துக் கட்டுவதில் அவர் ஊக்கமாகப் பங்குகொண்டார்.

(10 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்கள் மாநாடு...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையிலேயே இப்போது தொழிலாளர் போராட்டங்களைத் தீர்க்கும் பொருட்டு சிறப்பு பொலிஸ் படை அணி நிறுவுவது ஆரம்பமாகி உள்ளது. அவசரகாலச்சட்டம் தொடர்வதோடு தோட்டத்துறை இளைஞர்கள் நூற்றுக் கணக்கில் கைது செய்யப்படுகிறார்கள். யுத்தச் செலவினங்களுக்காக உயர்ந்த நிதி – 2700 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது யூ.என்.பி. யுத்த நிதியைக் காட்டிலும் 200 கோடி ரூபாக்கள் தாண்டிச் செல்கின்றது.

## சமாதான மோசடி

இறுதியாக இந்த பொதுஜன முன்னணி அரசாங்கம் சமாதான மோசடி என்ற துரும்பில் தொங்கிக் கொண்டுள்ளது. அரசாங்கத்தின் வக்கீல்களில் ஒருவரான விக்டர் ஐவன் தமது ''ராவய'' பத்திரிகை ஆசிரியத் தலையங்கத்தில் கூறியதாவது: ''...... வேறு எந்த பிரச்சினையை வெற்றிகரமாக தீர்க்காது போனாலும் இனக்குழு பிரச்சினையை மட்டும் வெற்றிகரமாகத் தீர்த்துவைப்பதில் ஜனாதிபதி வெற்றி பெறுவாரானால் அவரின் எதிர்கால பயணம் உறுதிப்பட அதுவே போதுமானது.'' இந்த முதலாளித்துவச் சார்பு வயிற்றுமாரி எழுத்தாளர்களின் முயற்சி என்ன? வடக்கின் முதலாளித்துவ விடுதலைப் புலிகளுடன் ஏதோ ஒரு சமரசம் செய்ய முயலும் பொதுஜன முன்னணி துரும்பில் தொங்கிக்கொள்வதே.

இதற்குப் பொருத்தமான விதத்தில் பப்லோவாத துரோகியான நவசமசமாஜக் கட்சி செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன சமாதான பேச்சுக்களில் ஒரு பிரச்சினை உள்ளது எனக் கூறிக்கொள்கிறார்.

''இந்த ஆட்சியை கையளிப்பதன் மூலம் வடக்கு–கிழக்கில் சுயாட்சியை உருவாக்குவது எந்த வர்க்கத்தின் உதவியோடு? இது மிகவும் முக்கிய பிரச்சினை'' என அவர் குறிப்பிடுகின்றார். தொடர்ந்தும் குறிப்பிடும் விக்கிரமபாகு ''இந்நாட்டைப் போலவே முழு உலக வரலாற்றிலும் தெரியும் தேசிய இனப் பிரச்சினையை தீர்ப்பதன் பேரில் தொழிலாளர் வர்க்க இயக்கம் மட்டுமே தலையிட்டுள்ளது'' என்கிறார்.

விக்கிரமபாகு கருணாரத்ன கருதும் இந்த தொழிலாளர் வர்க்கம் எது என்பதைக் குறிப்பிடும்போது பூனை பொதிக்குள் இருந்து பாய்கின்றது. அவர் கூறுகிறார்: ''இப்போது தென் ஆபிரிக்காவிலும பாலஸ்தீனத்திலும் அமுலில் உள்ள தற்காலிக சமாதானத்தை கூட நடைமுறைப்படுத்துகையில் தொழிலாளர் வர்க்கத்தின் தலையீடு பிரபல்யமாகியது'' என்கிறார்.

இது முதலாளி வர்க்கத்துக்குச் சாமரை வீசும் கரங்களாக தொழிலாள வர்க்கத்தினை மாற்றச் செய்யும் கடைகெட்ட முயற்சியாகும். தென் ஆபிரிக்காவிலும் பாலஸ்தீனத்திலும் ஏகாதிபத்தியவாதிகளின தலைமையீட்டின் கீழ் தேசியவாத முதலாளிகளைப் பயன்படுத்தி நிறுவப்பட்ட கூட்டுக்கள் தொழிலாளர் வர்க்கத்துக்கும் பொது மக்களுக்கும் எதிராக மாறியுள்ளமை ஏற்கனவே நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்தகைய ஒரு நிலைமையின் கீழ் சிங்கள ஆளும் வர்க்கமும் தமிழ் முதலாளி வர்க்கமும் ஒன்றாக இணைந்து கொள்வது தேசியப் பிரச்சினைக்கான தீர்வாகும் எனக் கூறும் அளவுக்கு நச்சுத்தனமான வேறு நப்பாசைகள் இருக்க முடியாது.

இன்றைய சகாப்தத்தில் முதலாளித்துவ வர்க்கம் வரலாற்று ரீதியில் பிற்போக்கானது. அவர்களுக்கு தேசியப் பிரச்சினை என்றாலும் சரி வேறு எந்தவொரு ஜனநாயகப் பணி என்றாலும் சரி அல்லது மக்களுடன் தொடர்பு பட்ட வேறு எந்தவொரு பிரச்சினை என்றாலும் சரி முற்போக்கான விதத்தில தீர்த்துவைக்க முடியாது. ஆதலால் இந்த முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துக்கு எதிராக சகல முதலாளித்துவக் கும்பல்களில் இருந்தும் சுயாதீனமாக தொழிலாளர் வர்க்கத்தின் தலைமைப் பாத்திரப் பிரச்சினையை தீர்ப்பது அத்தியாவசியம்.

இலங்கை முதலாளி வர்க்கத்தின் சுய வரலாறானது அது இனவாதத்தினை அதன் பிறந்த வீட்டுக்குள் இருந்தே கொண்டு வந்தது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. முதலாளி வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர்–1947ன் பின்னர் – தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்துக்கு எதிராக – தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களின் கிளர்ச்சிகளுக்கு எதிராக 'இனவாதத்தினை' கூரிய ஆயுதமாகத் தொடர்ந்து பாவித்து வந்தது. 1949ல் குடியுரிமைச் சட்டத்தை இயற்றி தோட்டத் தொழிலாளரை – சக்திவாய்ந்த தொழிலாளர் பிரிவினரை — இரண்டாம் தரமான பிரஜைகள் ஆக்கியது. எனினும் தொழிலாளர் வர்க்கம் ஒரே வர்க்கமாக அணிதிரண்டு முதலாளி வர்க்கத்தினை சவால் செய்ததோடு 1953 ஹர்த்தால் மூலம் முன்னணிக்கு வந்ததும் வடக்கு – தெற்கு தொழிலாளர்களை பிளவுபடுத்த இனவாதத்தை கிளறிவிட்டது. 1956ல் யூ என். பி; சி. ல. சு. க. என்ற இரண்டு முதலாளித்துவக் கட்சிகளும் சிங்கள மொழியை ஆட்சி மொழியாக்குவதில் இறங்கின. இது சிங்கள — தமிழ் தேசிய இனங்களை பிளவுபடுத்துவதாக அமைந்தது.

இதற்கு எதிராக அன்று லங்கா சமசமாஜக் கட்சி போராடியது. 1958ல் பண்டாரநாயக்கவின் அரசாங்கம் காலிமுகத் திடலில் நடந்த தமிழ் மக்களின் சத்தியாக்கிரகத்தை தாக்கி பிற்போக்கு இனவாதத்தை தூண்டிவிட்டது. இது தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களை இரத்தத்தில் மூழ்கடிப்பதற்கான பொதுஜன பாதுகாப்பு மசோதாவை இயற்ற மேற்கொள்ளப்பட்டது. 1961 – 62ல் தொழிலாளர் வர்க்கம் மீண்டும் எழுச்சி கண்ட வேளையில் சிறிமா பண்டாரநாயக்க இந்திய லால் பகதூர் சாஸ்திரியுடன்சேர்ந்து சிறிமா – சாஸ்திரி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். இது மீண்டும் ஒரு தடவை இனவாதத்தைக் கிளறிவிட்டு தொழிலாளர் வர்க்கத்தினை பிளவுபடுத்துவதாக அமைந்தது. 1960 களின் கடைப்பகுதியில் ஏகாதிபத்திய அமைப்பின – யுத்தத்தின் பின்னைய அமைப்பில் முதலாவது வெடிப்பு வளர்ச்சி கண்டது. இச்சமயத்தில் பொதுமக்களை தாக்கும் பொருட்டு 1966ல் சி. ல. சு. க, தலைமையில் சமசமாஜ — ஸ்டாலினிஸ்டுகளின் உதவியோடு இனவாத ஊர்வலம் வீதியில் இறங்கியது.

1970ல் அமைக்கப்பட்ட கூட்டரசாங்கம் வழங்கிய பொய் வாக்குறுதிகள் அம்பலமாகும் நிலைமையில் – 1971ல் இளைஞர்கள் கிளர்ச்சியில் இறங்கிய ஒரு வேளையில் – தொழிலாளர் வர்க்கம் போராட்டங்களில் ஈர்க்கப்படும ஒரு சட்டத்தில் கொல்வின் ஆர் டி. சில்வாவின் அரசியலமைப்பு சிங்கள பௌத்த அரசியலமைப்பாக தலை நீட்டியது. 1977ல் ஆட்சிக்கு வந்த யூ. என. பி. அரசாங்கம் தொடர்ந்து இனவாதத்தை கிளறிவிட்டதோடு அது 1983ல் இனவாத யுத்தமாக உச்சக் கட்டத்தை அடைந்தது.

இத்தகைய படுகேவலமான வரலாறு படைத்த முதலாளித்துவ வர்க்கத்தின் எந்தவொரு பகுதியினரும் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு தரும் வேலைத்திட்டத்தினை முன்வைப்பர் என எதிர்பார்க்க முடியுமா? இடையாது. அதற்குப் பதிலாக வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றுவதோடு சிங்கள — தமிழ் தேசிய இனங்களின் தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களினை துடைத்துக் கட்டும் பொருட்டு இராணுவ சர்வாதிகாரம் வளர்ச்சி காண்கிறது; தயாராகின்றது. அத்தயாரிப்பின் விசேட அங்கமாகவே இப்போது இனவாத கும்பல்களை அணிதிரட்டும் நடவடிக்கை ஆரம்பமாகி உள்ளது.

## தோட்டத் தொழிலாளர் எதிர்ப்பு யுத்தம்

இந்தப் படுகேவலமான காட்டுமிராண்டி நோக்கத்துடனேயே தோட்டங்களின் பங்குகளை நாட்டின் குடும்பங்களுக்கு இடையே பங்கிட்டு வழங்கும் திட்டம் — ஆரம்பமாகி உள்ளது இ. தொ. கா. வினதும் சந்திரசேகரனதும் சமசமாஜ - கம்யூனிஸ்ட் கட்சிகளதும் உதவியுடன் இந்த அலுகோசு வேலையில் இறங்க பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆயத்தமாகி வருகின்றது.

வடக்கு — கிழக்கு தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் கரைபுரண்டு முழு நாட்டையும் அதிரச் செய்யும் இனவாதத்தினை தூண்டிவிடுவதன் மூலம் இராணுவத்துக்கு இளைஞர்களை கட்டாய ஆட் திரட்டல்களால் சேர்த்து 'தோட்டங்களின் பங்குகளை காக்க வாருங்கள்' என்ற கோஷம் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

ஆதலால் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முன்னணியில் நின்று முழு நாடு பூராவும் தொடுக்கும் 'தோட்டங்களின் இரத்தப் பங்குகள் எமக்கு வேண்டாம்! தோட்டங்களை தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ் தேசிய மயமாக்கு!' என்ற சுலோகங்களின் கீழ் தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டப் போராட வேண்டும். அந்த இயக்கத்தினை இலங்கையிலும் இந்தியத் துணைக் கண்டத்திலும் உலகளாவிய ரீதியிலும தொழிலாளர் வர்க்கத்தினை ஒன்றிணைக்கும் ஒரு போராட்டமாக நாம் தொடுக்க உள்ளோம். இவை சமசமாஜ — ஸ்டாலினிச — நவசமசமாஜ போன்ற கட்சிகளதும் தோட்டத் தொழிலாளர்களிடையே பதுங்கிக் கொண்டுள்ள குட்டி முதலாளித்துவ இயக்கங்களதும், தொழிற்சங்க அதிகாரத்துவங்களதும பிற்போக்கை முழுமனே அம்பலமாக்கும்.

ஜே வி பி. பொதுஜன முன்னணியை ஆட்சியில் அமர்த்த தொழிற்பட்டுவிட்டு இன்று அதற்கு எதிரான முகம் காட்டும் தோரணையில் திரும்பவும் இனவாதத்தைக் கிளறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டுள்ளது. அத்தோடு அதில இருந்து பிளவுபட்ட 'ஜனதா மித்திரயோ' என்ற இயக்கம் தமிழ் மக்களிடம் இரத்தப் பலிகேட்கும் இயக்கத்தை ஆரம்பித்துள்ளது.

எனவேதான் நாம் தொழிலாளர் வர்க்கம் அரசியல் சுயாதீனத்தினை உறுதி செய்து கொண்டு ஒடுக்கப்படும் தமிழ் — சிங்கள மக்களின் தலைவனாக தோன்றுவதன் மூலம் தொழிலாளர் - விவசாயிகள் அரசாங்கத்தை - சிறீலங்கா — தமிழ் ஈழம் சோசலிச குடியரசை அமைக்க முன்னணியில் நிற்க வேண்டியதன் பிரமாண்டமான அவசியத்தினை வலியுறுத்துகின்றோம். இனவாதத்துக்கு எதிராக சத்தியப் பிரமாணம் செய்வதன் மூலமோ அல்லது வழிபாடு நடாத்துவதன் மூலமோ பிரச்சினைக்கு தீர்வு கிட்டாது. முதலாளித்துவ வர்க்க ஆட்சியை தூக்கி வீசி, தொழிலாளர் வர்க்கம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும். இனவாத யுத்தத்தினை நிறுத்துவதும் அவ்வாறே சம்பளம், சேவை நிலைமை, உதவிமானியம் காக்கவும் தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தின் கீழ் சோசலிச வேலைத்திட்டத்தை அமுல் படுத்துவது அவசியம்.

புரட்சிக்கு தயார் செய்வது என்பது தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு பதிலீடாக நிற்பது அல்ல. மாறாக தொழிலாளர்— ஒடுக்கப்படும் மக்களை புரட்சிகர செயற்பாட்டின் மட்டத்துக்கு கொணர்வதையே அது குறிக்கின்றது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நடவடிக்கை குழுக்களை கட்டி எழுப்பும் பிரச்சாரத்தில் ஈடுபட்டதன் அர்த்தம் அதுவே தொழிலாளர் வர்க்கம் அரச அதிகாரத்தை தமது கரங்களுக்குள் கொணர நடவடிக்கை குழுக்களையும் பாதுகாப்புக் குழுக்களையும் அமைப்பது அவசிய நடவடிக்கை.

இறுதி ஆய்வுகளில் சோசலிசப் புரட்சி என்பது அரசியல் அரங்கில் மக்களின் தலையீட்டை, ஊடுருவலை குறிக்கின்றது. அது புரட்சிக் கட்சியின் தலைமையில் செய்யும் தயாரிப்பாகும்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் மோசமான தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கும் தொழிலாளர் வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் அந்நிலைமையில் அனைத்துலக சோசலிசத்தின் புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒன்றிணைப்பதும் அணிதிரட்டுவதும் அவசியம். இம் மாநாட்டின முன்னுள்ள தீர்க்கமான பணி, தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை நனவு பெறச் செய்து புரட்சியாளர்களாக அணிதிரட்டுவதற்கான புரட்சிகர தலைமையை கட்டி எழுப்பும் சபதம் எடுப்பதேயாகும். சோசலிசப் புரட்சியை உலகளாவிய ரீதியில் ஒழுங்கு செய்வது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பணியாகும். அப்பணிக்கு தோள் கொடுக்க தீர்மானம் செய்யும் படியும் இம்மாநாட்டில் தலையிட்டு தமது அரசியல் வேலைத்திட்ட பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முயற்சிக்கும் படியும் வேண்டுகின்றேன். நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் யூனியனில் ஸ்டாலினிசத்துக்கு...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

ருஷ்யாவில் ''தனிநபர் வழிபாடு'' என்ற பெயரில் இடம் பெற்ற அம்பலப்படுத்தல்களின் பின்னர் — அதாவது 1956ல் குருச்ஷேவின் வெளிப்படுத்தல்களின் பின்னர் — றொக்லியட்டி இந்த அம்பலப்படுத்தல்களை ஆட்சேபித்துக் கட்டுரைகள் எழுதினார். இவை சோவியத் யூனியனுக்கு எதுவிதமான நன்மையையும் கொணராது என அவர் சொன்னார். அவர் பெரிதும் நேர்மையானவராய் இருந்திருப்பின் கோமின்டானுள் தான் எந்தளவுக்கு சீரழிந்து போயுள்ளார் என்பதை ஆய்வு செய்ய வேண்டி இருந்திருக்கும்.

உங்களின் கேள்வியுடன் தொடர்புபட்ட ஒரு பெரிதும் முக்கியமான விவகாரம் வருமாறு: இருபத்திரண்டாவது கட்சி காங்கிரஸ் சமயத்தில் — குருச்சேவ் பின்னர் தமது வாழ்க்கை வரலாற்றில் எழுதியது போல் மாஸ்கோ பொய் வழக்குகளிற்கு பலியானவர்களை முழுமனே புனருத்தாரணம் செய்யும் தயாரிப்பு ஏற்கனவே இடம்பெற்றிருந்தது. அவர்கள் இந்த பொய் வழக்குகள் தொடர்பான அவசியமான சகல விசாரணைகளையும் நடாத்தினர்; அவசியமான சகல தகவல்களையும் திரட்டினர்.

ஆனால் இது றொக்லியட்டி உட்பட பல தோழமை கம்யூனிஸ்ட் கட்சிகள் எனப்பட்டவற்றின் தலைவர்களிடமிருந்து வந்த பலத்த ஆட்சேபனை காரணமாக இடம் பெறவில்லை. அவர்கள் குருச்ஷேவுக்கு நேரடியாக கூறினார்கள்: நீங்கள் எமது சொந்த கட்சியின் அங்கத்தவர்களுக்கு எதிராக ஒரு பிரமாண்டமான தாக்குதலை தொடுப்பீர்கள். இந்த வழக்கு விசாரணைகளின் போது நாமும் அங்கு இருந்தோம். நாம் எமது நாடுகளுக்கு திரும்பி வந்து இந்த வழக்குகள் உண்மையானவையும் அவசியமானவையும் எனவும் இதற்குப் பலியானவர்கள் உண்மையிலேயே துரோகிகள் எனவும் எமது கம்யூனிஸ்ட் கட்சித் தொழிலாளர்களை நம்பச் செய்தோம்.

மாஸ்கோ பொய் வழக்குகளின் மோசடி பூரணமாக அம்பலமாக ஏன் 50 ஆண்டுகள் பிடித்தது என்பதை இது விளக்குகின்றது.

கேள்வி: ட்றொட்ஸ்கியின் கொள்கைகளின் பொருத்தம் பற்றி — முன்னைய சோவியத் யூனியனிலும் ஐக்கிய அமெரிக்க அரசுகளிலும் அவரின் கொள்கைகள் வேலைத் திட்டம் சம்பந்தமாக உங்கள் அபிப்பிராயம் என்ன?

ரொகோவின்: ட்றொட்ஸ்கியின் தீர்க்கதரிசனங்கள் உண்மையில் அவர் தீர்க்கதரிசனமாக கண்டு கூறியதை விட சற்று காலந்தாழ்த்தியேனும் உண்மையாகி விட்டன. அவரின் தீர்க்கதரிசனங்கள் அவர் குறிப்பிட்ட நேரசூசிகையின்படி சரியாக இடம்பெற்றிருக்குமானால் அவை மத நம்பிக்கை கொண்டவர்கள் கூறும் ஜோசியத்தின் ஆதிக்கத்துள் அடங்குவதோடு, வரலாறும் ஒரு மாயையான பண்பினைக் கொண்டிருக்கும்.

1930களில் ட்றொட்ஸ்கி பல தடவைகள் சோவியத் யூனியனின் முன்நோக்கின் பிரச்சினைக்குத் திரும்பினார். ஒவ்வொரு பெரும் தீர்க்கதரிசனங்களைப் போலவே பல உருவ பேதங்கள் காணப்பட்டன. ஒரு உருவ வேறுபாட்டில் அவர் ஸ்டாலினிச அதிகாரத்துவம் தூக்கி வீசப்படும் என்றார். ஒரு சமூகப் புரட்சியும் ஒரு புதிய சொத்து வடிவத்தை அமைப்பதும் வேண்டப்படாததால் அதனை அவர் அரசியல் புரட்சி என அழைத்தார்.

துர்அதிஸ்டவசமாக உண்மையில் இடம்பெற்ற உருவ வேறுபாடு இரண்டாவதாகும். அதனை நான் எதிர்ப்புரட்சி உருவ வேறுபாடு என அழைக்கின்றேன். இக் கருத்துப்பாட்டின்படி அதிகாரத்துவம் — ருஷ்ய ஆளும் கும்பல் சொத்து உடமையாளர்களாக வர முயற்சிக்கும். ஒரு புதிய முதலாளித்துவக் கட்சி உருவாக்கப்படும்.

சோவியத் யூனியனில் எதிர்ப் புரட்சிகர முதலாளித்துவப் புனருத்தாரணம் ஒரு புதிய உள்நாட்டு யுத்தத்தினை வேண்டி நிற்கும் எனவும் அது ருஷ்யாவில் ஏற்கனவே இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் அழிவைக் காட்டிலும் பெரிதும் நாசகரமானதாய் இருக்கும் எனவும் ட்றொட்ஸ்கி கூறி வைத்தார். துர்அதிஸ்டவசமாக ட்றொட்ஸ்கியின் தீர்க்கதரிசனத்தின் அந்த அம்சம் ஏற்கனவே இடம்பெற்றுவிட்டது. முன்னைய சோவியத் யூனியனின் குடியரசுகளின் சமகால நிலைமையானது இன்று பெரிதும் பொதுவாக உள்ள ஒரு சூத்திரத்தினால் நன்கு வர்ணிக்கப்பட முடியும்; தொடர்ந்து தோன்றிவரும் வெடிப்புக்களையும் புதிய பதட்ட வலயங்களையும் கொண்டு மெதுவாக இடம் பெற்றுவரும் உள்நாட்டு யுத்தம் என நீங்கள் அழைக்க வேண்டியிருக்கும் — ரட்ஸ்கிஸ்தான், செச்சினியா, நாகொர்னா — கரபாக், அப்காசியா. இந்தச் சகல பிராந்தியங்களிலும் இரத்தக் களரி ஏற்பட்டுள்ளது.

இந்த மோதுதல்களில் சொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை இப்போது கிட்டத்தட்ட ருஷ்ய உள்நாட்டு யுத்தத்தின்போது கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையின் அரைப்பங்கினை எட்டியுள்ளது. ட்றொட்ஸ்கி தீர்க்கதரிசனமாகக் கண்ட பொருளாதார, சமூக சீரழிவினைப் பற்றி ஒருவர் கலந்துரையாடின் — உதாரணமாக கலாச்சார மட்டத்தின் துரித வீழ்ச்சி — இந்தப் போக்கு பிரமாண்டமான பரிமாணத்தினை எடுத்துள்ளது.

ட்றொட்ஸ்கி முன்வைத்த திட்டவட்டமான வேலைத் திட்டத்தினைப் பொறுத்த மட்டில் அவரின் திட்டவட்டமான உலக சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் இன்றைய நிலைக்கு இனமும் பொருத்தமானவை மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனினின் அடிப்படைக் கருத்துக்களைப் பொறுத்தமட்டிலும் நீங்கள் இதையே கூற வேண்டியுள்ளது.

மார்க்சிசம் ஒரு திறந்த அமைப்பு அது விஞ்ஞானத்திலும் சமூக விஞ்ஞானத்திலும ஏற்பட்ட சமீபகால அபிவிருத்திகளுடன் சேர்ந்து அபிவிருத்தி காண வேண்டும். அங்கு புதிய கண்டுபிடிப்புகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன ஆதலால் நாம் ட்றொட்ஸ்கியின் ஒவ்வொரு தனிக் கருத்துக்களையும் பொறிமுறை ரீதியில் இடம் மாற்ற முடியாததோடு அவற்றை நேரடியாக அமெரிக்காவுக்கோ அல்லது இன்றைய ருஷ்யாவுக்கோ பிரயோகிக்க முடியாது. ஆனல் அவரின் அடிப்படைக் கருத்துக்கள் இன்று உலகம் பூராவும் உள்ள கம்யூனிஸ்ட் சார்பு மக்களுக்கு வழிகாட்டும் முக்கிய கருத்துக்களாக உள்ளன.

கேள்வி: ஹங்கேரியிலும் பல்கேரியிலும், போலந்திலும் மாஜி கம்யூனிஸ்ட் கட்சிகளின் வருகை அந்நாடுகளில் சோசலிசத்தின் ஒரு புதிய கட்டத்தினை சமிக்ஞை செய்கின்றதா?

ரொகோவின்: நான் சொல்ல வேண்டியது இதுதான்: நிஜ சோசலிஸ்ட் அல்லது கம்யூனிஸ்ட் கட்சிகள் அந்நாடுகளில் ஆட்சிக்கு வந்துள்ளன என நான் நம்பவில்லை, அவை போல்ஷிவிக் அல்லது லெனினிஸ்ட் பாணியிலான கம்யூனிஸ்ட் கட்சிகள் அல்ல. உண்மையில் சோசலிஸ்ட் நாடுகள் என முன்னர் அழைக்கப்பட்டவற்றின் செல்வாக்குக்கு உட்பட்டவை உட்பட தம்மை கம்யூனிஸ்ட் என அழைத்துக் கொள்பவற்றின் செல்வாக்கு வளர்ச்சி காண்கின்றது. இந்த அபிவிருத்தியின் துர்அதிஸ்டவசமான அம்சம் என்னவெனில் இக்கட்சிகளின் தலைவர்கள் இடைவிடாது ஸ்டாலினிசம், சோவினிசம், யூதர் எதிர்ப்புவாதம் போன்ற திசைகளில் அடிபட்டுச் செல்வதோடு அவற்றைக் கம்யூனிஸ்ட் கட்சிகள் என அழைக்கவும் முடியாது.

# நாணய நெருக்கடி உலகப் பொருளாதார வீழ்ச்சியை...

(6ம் பக்கத் தொடர்ச்சி).

கடந்த இரண்டு தசாப்தங்களாக இடம்பெற்று வரும் உலக நாணய வர்த்தகத்தின் பெருக்கத்தில் இது நன்கு வெளிப்பாடாகி உள்ளது. அமெரிக்க சமஷ்டி றிசேர்வ் டாலரின் மதிப்பைப் பேணுவதற்கு 33 பில்லியன் டாலர்களைக் கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக 36 பில்லியன் டாலர்களை திறைசேரி நாணயமாற்று ஸ்திரப்பாட்டு நிதியாக கொண்டுள்ளது. இதில் 20 பில்லியன் டாலர்கள் மெக்சிக்கோவை பிணை எடுக்கவென ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வர்த்தக நாளிலும் உலகப் பணச் சந்தைகள் ஊடாக 1,000 பில்லியன் (1 டிரில்லியன்) டாலர்கள் பெருக்கெடுக்கின்றது. இந்த நாணய வர்த்தகத்தில் பெரும் பகுதிக்கும் உற்பத்திப் பொருளாதார நடவடிக்கைகளை நிதியீட்டம் செய்வதற்கும் எதுவித தொடர்பும் கிடையாது. 350 டிரில்லியன் (350,000 பில்லியன்) வருடாந்த நாணய வர்த்தகத்தில் 5 டிரில்லியன் மட்டுமே வர்த்தக நிதியீட்டத்துக்கும் முதலீட்டுக்கும் செல்கிறது.

இந்நடவடிக்கைகள் முற்றிலும் ஒட்டுண்ணித்தனமானவை. உற்பத்தி கிடையாது. பெறுமானம் சிருஷ்டிக்கப்படுவதில்லை. மாறாக குறுங்கால நோக்கங்களுக்கான ஊகங்கள் உற்பத்தியை சிதறடிக்கவே, உதவுகின்றன. முதலாளித்துவப் பெறுமான முறை தொழிலாளர் வர்க்கத்தின உழைப்பினால் சிருஷ்டிக்கப்பட்ட உபரிப் பெறுமானத்தை பிடுங்குவதை அடிப்படையாகக் கொண்டது. தொழில் நுட்பம், கணனியமாக்கம் மைக்ரோசிப்ஸ் முதலானவற்றிலான புரட்சிகர மாற்றங்கள் தொழிலாளர் வர்க்கத்தின் அதிகரித்த தொகையினரை உற்பத்தி போக்கில் இருந்து முழுமனே வெளியே தள்ளி விடுகின்றது. அதே சமயத்தில் முதலாளிகள் ஊகங்களில் முன்னொருபோதும் இல்லாத விதிமுறைகளை கையாளுவதால் உபரிப் பெறுமானம் மீதான கடதாசிக் கோரிக்கைகள் பெருகுகின்றது.

மெக்சிக்கோவில் நாணய நெருக்கடி ஏற்கனவே உருவாக்கியுள்ள நிலைமைகளை தொழிலாளர்கள் எச்சரிக்கையாக கொள்ளவேண்டும். ஒரு நாளிரவில் வட்டி வீதம் 50%-70% வீதங்களுக்கும் இடையே அதிகரித்தது. பணவீக்கம் 50 வீதத்தால் பாய்ந்து செல்கிறது. கடந்த ஒரு சில மாதங்களில் மட்டும் 2 1/4 இலட்சம் தொழிலாளர்கள் பக்டரி மூடுவிழாக்களால் தொழில் இழந்துள்ளனர். உலகம் பூராவும் உள்ள தொழிலாளர்கள் அத்தகைய நிலைமைகளுக்கு முகம் கொடுக்க நனவான முறையில் தயார் செய்ய வேண்டும். இத்தகைய தயாரிப்புக்கள் தொழிலாளர் இயக்கத்தினை பல தசாப்தங்களாக மேலாதிக்கம் செய்து வந்த கருத்துக்களையும் சிந்தனைகளையும் ஒரு விமர்சனக் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்வதுடன் ஆரம்பிக்க வேண்டும். இலாபமுறை இயற்கையானது புனிதமானது என்ற வெகுஜனத் தொடர்பு சாதனங்களதும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களதும் பிரச்சாரங்கள் தொழிலாளர் வர்க்கத்தினை ஆதிக்கம் செய்கின்றது. இதனை நனவான முறையில் சவால் செய்யாமல் ஒரு பதிலீட்டைக் காணாது போகின் தொழிலாளர் வர்க்கம் முட்டுச் சுவருக்குள் முடங்கிக் கிடக்க நேரிடும்.

காலவதியானதும் அழிவு நிறைந்ததுமான முதலாளித்துவ இலாப முறையை தூக்கிவீசி, அதனை திட்டமிட்ட சோசலிச பொருளாதாரத்தினால் பதிலீடு செய்யும் பொறுப்பிற்கு தொழிலாளர் வர்க்கம முகம் கொடுக்கிறது. இது அனைத்து நாடுகளதும் தொழிலாளர் வர்க்கத்தினை சோசலிச அனைத்துலகவாத வேலைத் திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்டும் ஒரு பொதுப் போராட்டத்தினை வேண்டி நிற்கிறது, இத்தகைய வேலைத்திட்டத்தின் மூலமே தொழிலாளர் வர்க்கம் முகம் கொடுக்கும் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் இலங்கையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், உலக ட்றொட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுமே இப் போராட்டத்துக்கு தோள் கொடுக்கின்றன.


சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியைக் கட்டி எழுப்பு!

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்!**

பெயர்: ..................................................

முகவரி: ..................................................

..................................................

..................................................

தொழில்: ..................................................

தொலை பேசி இல: ..................................................

இப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி:
தேசிய செயலாளர்,
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
இல: 90, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு - 10.


கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90ல் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51-ஆம் இலக்கத்திலுள்ள பியதாஸ அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org